பக்கங்கள் : எட்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 23 வெள்ளிக்கிழமை (08.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 283

# இலங்கை நிலைமையைப் புதுடில்லி மிக சிரத்தையோடு அவதானிக்கிறது!

## முழு அளவில் போர் வெடிக்கும் ஆபத்து குறித்து அதிகம் கரிசனை

புதுடில்லி, செப்டெம்பர் 8

**இலங்கையில் முழு அளவில் மோசமான யுத்தம் வெடிக்கும் பேராபத்து ஏற்பட்டிருப்பதாகக் கருதும் இந்திய அரசு, இலங்கையின் நிலைமை குறித்து மிகுந்த சிரத்தையோடு அவதானித்து வருகின்றது எனப் புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

"இலங்கைப் படைகள் சம்பூரை ஆக்கிரமித்தமை மூலம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டன." - என்ற சாரப்பட விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நோர்வே அனுசரணையாளர்களிடம் கருத்து தெரிவித்திருக்கின்றமை குறித்து இந்தியா அதிக கவனம் செலுத்தியிருக்கின்றது.

யுத்த நிறுத்தம் முறிந்து முழுப் போர் வெடிப்பதற்கான சூழ்நிலை இப்போது உருவாகியிருப்பதாகக் கருதும் புதுடில்லி, அதன் காரணமாக இலங்கை விடயம் குறித்து விரைந்தும், அதிக ஈடுபாட்டுடனும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்றும் கருத்துக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. - சு.க. இடையே இன்று மீண்டும் பேச்சு!

ஜே.வி.பியால் முன்வைக்கப்பட்டு, அரசால் நிராகரிக்கப்பட்ட நான்கு கோரிக்கைகள் குறித்து இன்று ஸ்ரீல.சு. கட்சிக்கும், ஜே.வி.பிக்குமிடையில் மீண்டும் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

ஜே.வி.பி., அரசுடன் இணைந்து அமைச்சுப் பொறுப்புகளை ஏற்க 20 நிபந்தனைகளை முன்வைத்தது. அவற்றில் நான்கை ஸ்ரீல.சு.கட்சி நிராகரித்து விட்டது.

- யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்யவேண்டும்.
- சமாதானத்துக்கான அனுசரணையாளர் பொறுப்பிலிருந்து நோர்வேயை நீக்க

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பங்களாதேஷ் சரக்குக் கப்பல் காலி கடற்பரப்பில் மூழ்கியது

கொழும்பு, செப்.8

காலி மாவட்டம் ஹொக்கலை கடற்பரப்பில் மூழ்கிக் கொண்டிருந்த பங்களாதேஷ் கப்பலில் இருந்து 34 பேரை இலங்கைக் கடற்படையினர் நேற்றுக் காலை மீட்டிருக்கின்றனர். பர்மாவிலிருந்து மும்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்தச் சரக்குக் கப்பலில் 30 பணியாளர்களும், பெண்கள் இருவரும், 2 குழந்தைகளும் இருந்தனர். இடைவழியில் - காலிக்கு அப்பால் கொக்கலையை அண்டிய கடற்பரப்பில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டது. காலநிலையும் சீரற்றதாக மாறவே கப்பல் கடலில் மூழ்கத் தொடங்கியது.

இது தொடர்பாக இலங்கைக் கடற்படையினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனே

(08 ஆம் பக்கம் பார்க்க)

**எந்த ஒரு நாட்டினதும் உள்விவகாரங்களில் தலையிடுவது இந்தியாவின் கொள்கையல்ல**

## தூதர் நிருபமா பற்றிய அனுராவின் கருத்துக்கு இந்திய வெளியுறவு அமைச்சு நேற்று விளக்கம்

புதுடில்லி, செப்.8

எந்த ஒரு நாட்டினதும் உள்விவகாரங்களில் தலையிடுவது என்பது இந்தியாவின் கொள்கையல்ல.

- இவ்வாறு தெரிவித்திருக்கும் செய்திக் குறிப்பு ஒன்றை இந்திய வெளிவிவகார அமைச்சு நேற்று விடுத்தது.

கொழும்பில் பணியாற்றும் இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் அவர்களைக் கடுந்தொனியில் விமர்சித்து சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கும் கருத்துக்களுக்குப் பதிலளித்தே இந்திய வெளிவிவகார அமைச்சு மேற்படி கருத்தை வெளியிட்டிருக்கிறது.

இனப் பிரச்சினை விவகாரத்திலும், இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களிலும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் தேவைக்கு அதிகமாக மூக்கை நுழைப்பதை நிறுத்தவேண்டும். எமது பிரச்சினைகளை எப்படிக் கையாள்வது என்பதில் அவர் எங்களுக்கு அறிவுரை வழங்கத் தேவையில்லை என்று சுற்றுலாத்துறை அமைச்சர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பேசும்போது கடுமையாக விமர்சித்திருந்தார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரை நோர்வே குழுவினர் சந்தித்துப் பேச்சு

கிளிநொச்சி, செப்.8

நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம்செய்த நோர்வே நாட்டின் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தலைமையிலான குழுவினர் அங்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நடுவப் பணியகத்தில் மாலை 5 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கருடன் பிரதித் தூதர் கரால்ட் ஸ்ரெட், இரண்டாம் நிலைச் செயலர் ரொம்மைக் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தரப்பில்அதன் தலைவர் வீ. சிவனடியார், திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, பொறியியலாளர் ரமணன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்குபற்றினர்.

அண்மைக்காலமாக தமிழர் தாயகப் பிரதேசங்களான வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்று வருகின்ற இராணுவத்தின் நகர்வு முயற்சிகளுக் (08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.-திருமலை பயணிகள் கப்பல் சேவை அடுத்த வாரம் ஆரம்பம் என்கிறது அரசு

*அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தகவல்*

கொழும்பு, செப்.8

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையிலான பயணிகள் கப்பல் சேவை அடுத்த வாரம் ஆரம்பமாகுமென்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் கே.திவாரட்ன கொழும்பில் நேற்றுதெரிவித்தார்.

முகமாலை, பளை பகுதிகளில் புலிகளுக்கும் அரச படையினருக்குமிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக ஏ-9 வீதி மூடப்பட்டுள்ளமை தெரிந்ததே. இதனால் பல்வேறு தேவைகளுக்காக யாழ். குடாநாட்டுக்குச் சென்ற அரச ஊழியர்கள், கல்வியி

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டத்துக்கு இ.தொ.காங்கிரஸ் ஆதரவு

### சபைக்கு சமூகம் தராமல் ம.ம.மு. நழுவல்

கொழும்பு, செப்.8

அவசரகாலச்சட்டம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய சிறுபான்மைக் கட்சிகளும் அதனை ஆதரித்து வாக்களித்திருக்கின்றன.

இதற்கு முன்னர் அவசரகாலச்சட்டத்தை இ.தொ.கா. எதிர்த்து வந்தது. அல்லது வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் தவிர்த்து வந்தது.

"இந்தச் சட்டம் சிறுபான்மையின மக்களுக்கு - அதிலும் குறிப்பாக தமிழ் மக்களுக்கு - எதிரானதும், அவர்களை கண்டபடி கைது செய்யவும் தடுத்துவைக்க வழிவகுக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் புலிகளின் பகுதியில் உணவு, எரிபொருள் தட்டுப்பாடு

மன்னார், செப்8

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்களுக்கு உணவு, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் போன்றவற்றிற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள் ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்ற வர்த்தகர்கள் பொருள்களைக் கொண்டுவருவதற்குப் படையினர் தடை விதித்துள்ளனர். இதனாலேயே, இந்த நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிலங்குளம் பாதை திறக்கப்பட்டும் அப்பாதையூடாகப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிக்கு வர்த் தகர்கள் பொருள்களைக் கொண்டுவரப் படையினர் அனுமதிக்கவில்லை. மன்னாரில் புலிகளின் பகுதிகளிலுள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் சொற்ப அளவு பொருட்களே கையிருப்பில் உள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன. இதனால், பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் மக்கள் அப்பகுதி சிவில் அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

(கு)

## பாடசாலைப் பகிஷ்கரிப்பை நிராகரிக்கக் கோரி சுதந்திர மாணவர் இயக்கம் அறிக்கை

யாழ்ப்பாணம்,செப்.8

பாடசாலை பகிஷ்கரிப்பை நிராகரிக்கக் கோரி சுதந்திர மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

நேற்றிரவு உதயன் அலுவலகத்தில் கையளிக்கப்பட்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாங்கள் சுதந்திரமாகவே கல்வியை தொடர்ந்து வந்தவர்கள். ஆனாலும் போர்ச் சூழல் என்பது எமது கல்வி கற்கும் சுதந்திரத்தின் மீது பாரிய சுமைகளை சுமத்தி வருகின்றது. அண்மைக்கால போர் அனர்த்தங்களில் சிக்குண்ட நாம் சுதந்திரமாக கல்வியை தொடர முடியாது தவித்திருந்தோம்.

மறுபடியும் ஒரு குழப்பம். மறுபடியும் எமது கல்விகற்கும் சுதந்திரத்தின் மீது தடை. யாழ். மாணவர் ஒன்றியம் என்ற பெயரில் வெளி

(07 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

# தென்மராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்தோர் சொந்த இடங்களுக்கு

தென்மராட்சி, செப். 8

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதல்களை அடுத்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியிருந்த மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பிச் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை - மீளக் குடியமரும் மக்கள் அந்தந்தப் பகுதி படைமுகாமில் விவரங்கள் பதிவு செய்த பின்னரே வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதாகவும் -

தற்போது இடம்பெயர்ந்த மக்கள் தமது குடியிருப்புகள், காணிகள் ஆகியவற்றைப் பார்வையிட்டு அங்கிருந்து அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவதாகவும் - பிரதேச மக்கள் தெரிவித்தனர். (117)

## பட்டப் பகலில் வீடுடைத்து 6 லட்சம் ரூபா நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம்,செப்.8

கொக்குவில் ஸ்ரேசன் வீதியில் வீட்டார் இல்லாதவேளை பார்த்துச் சென்ற திருடர்கள் அதனை உடைத்து, ஆறு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை திருடிச்சென்றுள்ளனர். பட்டப் பகலில் முற்பகல் 10 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

வீட்டின் பின்பக்கக் கதவுகளை உடைத்து உள்ளே புகுந்த திருடர்கள் நகைகளை களவாடிக்கொண்டு தப்பிவிட்டனர்.

வெளியே சென்றவர்கள் நண்பகல் வீடு திரும்பியபோது நகைகள் களவாடப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (1)

## மரவேலைப் பயிற்சி மீண்டும் ஆரம்பம்

தொழில் திணைக்களத்தினால் மானிப்பாயிலுள்ள மரவேலைப் பயிற்சி நிலையத்தில் நடந்தப்பட்டு வந்த மரவேலைப் பயிற்சி நெறி மீண்டும் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

பயிற்சி பெறுபவர்களை அன்றைய தினம் பயிற்சிக்கு தவறாது சமூகம் தருமாறு வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் கேட்டுள்ளார். (1-135)

## இரு வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ் வண்டிகள்

வலி. தென்மேற்கு, செப். 8

அளவெட்டி அரசினர் வைத்தியசாலைக்கும் கோண்டாவில் அரசினர் வைத்தியசாலைக்கும் யாழ். சுகாதார திணைக்களம் தற்காலிகமாக அம்புலன்ஸ் வண்டிகளை வழங்கியுள்ளது.

அளவெட்டி வைத்தியசாலையிலுள்ள அவசர நோயாளர்களையும், பிரசவ தாய்மாரையும் தெல்லிப்பளை மாவட்ட அரசினர் வைத்தியசாலை, யாழ். அரசினர் போதனா வைத்தியசாலை ஆகியவற்றுக்கு ஊரடங்கு நேரத்தில் மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்வதற்காக இந்த அம்புலன்ஸ் வண்டிகள் தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளதாக யாழ். சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (1-135)

## பனங்கட்டிக்கு மீண்டும் மவுசு

வலி. தென்மேற்கு, செப். 8

வலி. தென்மேற்கில் சீனிக்கு ஏற்பட்டிருக்கும் பலத்த தட்டுப்பாட்டினைத் தொடர்ந்து பனங்கட்டிக்கு அதிக மவுசு ஏற்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பெரியவிளானிலுள்ள தொழிற்சாலையில் கருப்பணியிலிருந்து பனங்கட்டி உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

இங்கு உற்பத்தியாகும் பனங்கட்டிக்கு தற்போது அதிக மவுசு ஏற்பட்டிருப்பதையும் -

மருத்துவக் குணமுள்ள பனங்கட்டிகளை இப்பிரதேச மக்கள் வாங்கி பயன்படுத்தி வருவதையும் -

அவதானிக்க முடிகின்றது. (1-135)

## நிறுத்தப்பட்டிருந்த பயிற்சிகள் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 8

தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த பரிசாரகர் பயிற்சி எதிர்வரும் திங்கட்கிழமை மீண்டும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்துடன் பண்ணை பிராந்திய பயிற்சி நிலையத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த மருந்து கலவையாளர் பயிற்சி நெறியும் அன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த குடும்பநலமருத்துவர்களுக்கான பயிற்சி நெறிகள் எதிர்வரும் 12ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயிற்சியாளர்களை கலந்துகொள்ளுமாறு பிரதிமாகாண சுகாதாரப்-பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆர். கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (ப-203)

# வழமையான நேரத்திற்கு கடமைக்கு சமுகமளிக்கவும்

### அரச ஊழியர்களுக்கு அரச அதிபர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம் செப்.8

வலிகாமம், வடமராட்சி, தீவகம் பிரதேசங்களில் பணிபுரியும் அரச ஊழியர்கள் உரிய வழமையான நேரத்தில் பணிக்கு சமுகமளிக்க வேண்டும் என்று அரச அதிபர் கே. கணேஷ் கேட்டுள்ளார். இது தொடர்பாக செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது வலிகாமம், வடமராட்சி, தீவகப் பிரதேசங்களுக்கு காலை 6 மணியில் இருந்து மாலை 6 மணிவரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுவதனால் இப்பிரதேசத்துக்குட்பட்ட மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், உ.அ. அதிபர் பணிமனைகள், ஏனைய அரச திணைக்களங்கள் என்பவற்றில் இப்பகுதிகளுக்குள் வதியும் சகல அலுவலர்களும் வழமையான அலுவலக நேரத்தைப் பின்பற்றவேண்டும்.

தூர இடங்களில் இருந்து கடமைக்கு சமுகமளிக்கும் அலுவலர்கள் பிற்பகல் பஸ் நேரங்களை அனுசரித்து அதற்கமைவாக சேவை நிலையத்திலிருந்து செல்லுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவை பெறுத்தவரை தூர இடங்களில் இருந்து வருவோர் ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்திலிருந்து இயன்றளவு நேரத்துடன் கடமைக்குச் சமுகமளித்து, பிற்பகல் பஸ் சேவை நேரத்திற்கமைவாக சேவை நிலையத்திலிருந்து செல்லுமாறும் வேண்டப்படுகின்றனர்.

- என்றுள்ளது. (1)

# நிவாரணப் பொருள்களை ஞாயிறுக்கு முன் வழங்கி முடிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 8

குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணச் செயற்பாட்டை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னதாக வழங்கி முடிக்க வேண்டுமென அரச அதிபர் கே.கணேஷ் இவ்வாறு பிரதேச செயலர்களை அறிவுறுத்தியுள்ளார்.

குடாநாட்டில் சகல பிரதேச செயலர்களுக்கும் ப.நோ.கூ. சங்க பொது முகாமையாளர்களுக்கும் இந்த அறிவுறுத்தலை அரச அதிபர் விடுத்துள்ளார்.

அசாதாரண சூழ்நிலை காரணமாக 11.08.2006 ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெயர்ந்தவர்களுக்கும், ஏற்கனவே இடம்பெயர்ந்தவர்களுக்கும் ப.நோ.கூ. சங்கக் கிளைகள் ஊடாக தற்சமயம் உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டுவருவது தெரிந்ததே. (அ-1)

## படுகொலைகள்

### கொற்றாவத்தையில்...

கரவெட்டி, செப். 8

வடமராட்சி கொற்றாவத்தை கட்டைப் புளியடியைச் சேர்ந்த மூன்றுபிள்ளைகளின் தாய் ஒருவர் நேற்று பிற்பகல் ஒருமணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த மகேந்திரன் தயாமதி (வயது-33) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இவர் மத்திய கிழக்கு நாடு ஒன்றில் பணியாற்றி நாடு திரும்பியிருந்தார்.

நேற்று பிற்பகல் அவரது வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாதவர்கள் அவரை வெளியே அழைத்துச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (1-170)

### கரணவாயில் ......

யாழ்பாணம்,செப்.8

கரணவாய் மேற்கு ஆலையடிப் பகுதியில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நெல்லியடியில் வீடியோக் கடையொன்றில் பணிபுரிந்த சூரியமூர்த்தி அருமைராசா (வயது 23) என்னும் 2 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இவர் தனது வீட்டிலிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் இவரைச் சுட்டுவிட்டுச் சென்றுள்ளனர். சூட்டில் படுகாயமடைந்த இவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதீக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைக்கு உட்படுத்திய போது அங்கு அவர் உயிரிழந்தார். (த-15-70-78)

## திருமறைக் கலாமன்றத்தில் நுண்கலை வகுப்புகள்

யாழ்ப்பாணம், செப். 8

திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்படும் - தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த - நுண்கலை வகுப்புகள் அனைத்தும் மீண்டும் நாளை சனிக்கிழமை முதல் வழமையான நேர அட்டவணையின்படி நடைபெறும் என கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (202)

# மூதூரிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மெல்ல மெல்ல மீளக்குடியமர்வு

கொழும்பு, செப்.8

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் கடந்த மாதம் மூதூரில் இடம்பெற்ற தாக்குதல் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்து கந்தளாய், கிண்ணியா மற்றும் தம்பலகாமம் உள்ளிட்ட பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ள முஸ்லிம்கள் மீண்டும் தங்களது சொந்த இடங்களுக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர்.

நேற்றுமுதல் கந்தளாய் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் உப்அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டு 100 பஸ்கள் சேவையில் நிறுத்தப்பட்டன. இந்த பஸ்கள் மூலம் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் தங்களது சொந்த இடங்களான மூதூர் மற்றும் தோப்பூர் போன்ற இடங்களுக்குச் சென்றனர்.

இதுவரை 75 வீதமான மக்கள் மீளக் குடியமர்ந்துவிட்டனர் என்றும் மீதி 25 வீதமான மக்கள் நோன்பு மாதத்திற்கு முதல் குடியமர்த்தப்பட்டுவிடுவர் என்றும் அமைச்சர் நஜீப் ஏ.மஜீத் தெரிவித்தார்.

இம்மக்களை மீள்குடியமர்த்தி முடிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அரசு மேற்கொண்டுள்ளது என்றும் மூதூரில் அனைத்து அடிப்படை வசதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இவ்வேறபாடுகளைத் துரிதப்படுத்துவதற்கான கூட்டமொன்று நேற்றுக்காலை கந்தளாய் பிரதேச செயலகத்தில் அமைச்சர் நஜீப் ஏ.மஜீத் தலைமையில் நடைபெற்றது. அப்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்கள் ரிஷாத் பதியுதீன், அமீர் அலி, பிரதி அமைச்சர்ஹுஸைன் பைலா, ஜே.வி.பியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த வீரசேகர, திருகோணமலை மாவட்டத்தின் உலமா சபையின் தலைவர் ஹரீம் மௌலவி, வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் சமரவிக்கிரம மற்றும் திருமலை மாவட்டத்தின் அரச அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர். (த -07)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறு தாமதமாகும்

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்றுமுடிந்த க.பொ.த.உ/தரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்படுவது தாமத மாகும் என தேசிய கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் பரீட்சை நடந்தது. இதன்முடிவு ஒகஸ்ட் மாதம் வெளிவரவிருந்தது. ஆனால், வினாப்பத்திரங்களை திருத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இப்பெறுபேறுகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்படுமென கல்வித் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். (த-04)

# வைகோ மீது சட்ட நடவடிக்கை எடுக்கக்கோரி காங்கிரஸ் எம்.எல்.ஏ. பொலிஸில் முறைப்பாடு!

வேலூர், செப்.8

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக வேலூரில் உரையாற்றிய ம.தி.மு.கவின் பொதுச் செயலர் வைகோவிற்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்கக்கோரி வேலூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் காங்கிரஸ் சட்டப் பேரவை உறுப்பினர் ஞானசேகரன்.

இந்தியாவில் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக வைகோ வேலூரில் உரையாற்றியுள்ளார். இது தொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என ஞானசேகரன், வேலூர் தெற்கு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பில் தமிழக முதல்வர் கருணாநிதிக்கும் அவர் கடிதமொன்றை வரைந்துள்ளார். அதில் அவர் -

வேலூர் சங்கமம் திருமண மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற ம.தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டத்தில் வைகோ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியுள் ளார்.

'நேற்றும் ஆதரித்தோம், இன்றும் ஆதரிக்கிறோம், நாளையும் ஆதரிப்போம்' - என்று அவர் பேசியுள்ள பேச்சு சில நாளிதழ்களில் வெளிவந்துள்ளது.

சென்னை கூட்டத்தில் வைகோ விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியமை தொடர்பில் நடவடிக்கை எடுக்கக்கோரி முதல்வரிடம் சட்டப் பேரவையில் நானும், பீட்டர் அல்போன்ஸும் வலியுறுத்தினோம்.

அப்போது 'சட்டம் தனது கடமையைச் செய்யும்' என முதல்வர் உறுதியளித்தார். ஆனால், தொடர்ந்து வைகோ சட்டத்தை மீறி விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசி வருகிறார். இது இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழும், தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் குற்றம். இதன் மூலம் சட்டம், ஒழுங்கை சீர்குலைக்க சிலர் திட்டமிட்டு வருகின்றனர் - என அவர் தெரிவித்துள்ளார். (எ)

# ம.தி.மு.க. மணிமாறனுக்கு நிபந்தனையுடன் பிணை!

சென்னை, செப்.08

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவாக பேசினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட ம.தி.மு.கவின் தென்சென்னைச் செயலாளர் மணிமாறனுக்கு நிபந்தனையுடன் கூடிய பிணையை வழங்கியுள்ளது சென்னை உயர்நீதிமன்றம்.

மணிமாறன், காஞ்சிபுரத்திலுள்ள விஷ்ணு காஞ்சி பொலிஸ் நிலையத்திற்குச் சென்று ஒரு வார காலமளவிற்குக் கையெழுத்திடல் வேண்டும் என்றும், எந்தவொரு தடைசெய்யப்பட்ட இயக்கத்திற்கு ஆதரவாக அவர் பேசக்கூடாது என்றும், சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னையில் இடம்பெற்ற ம.தி.மு.கவின் பொதுக்கூட்டமொன்றில் -

'ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக நாங்களும் ஏ.கே.47 துப்பாக்கிகளை ஏந்தத் தயாராகவே இருக்கிறோம். ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கத் தவறின் தனித் தமிழ்நாடு கோரிப் போராடுவோம்' - என்று மணிமாறன் அங்கு உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து அவர் கடந்த 17ஆம் திகதி கைது செய்யப்பட்டமை தெரிந்ததே. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# இராணுவச் சமவலு நிலை குழம்ப அமைதி நிலையும் காலாவதியாகிறது

*''யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த நாளில் இரு தரப்புக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் எந்த வரையறையில் இருந்தனவோ, அந்த வரையறைக்குள் மீள அவை கொண்டுவரப் படாமல் இனிவரும் காலங்களில் எந்த சமரச முயற்சிக்கும் இடமில்லை. அதுவே விடுதலைப் புலிகளின் தலைமையின் நிலைப்பாடு. அதை நோர்வே அனுசரணைத் தரப்பிடம் நேரடியாகவும், தெளிவாகவும் தெரிவித்துவிட்டோம்.''*

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்திருக்கின்றார். நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரை கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர், ஊடகவியலாளர்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பகையுறவு தீவிரமடைந்து, முரண்பாடு முற்றி, விரோதப் போக்கு விரிவடைந்ததை அடுத்து பல்வேறு முனைகளிலும் களச் சமர்கள் வெடித்திருக்கின்றன. அந்த மோதல்களின்போது, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் இரு தரப்புகளினதும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் எல்லைப் புறங்கள் என வகுக்கப்பட்ட பகுதிகளைத் தாண்டி, ஒரு தரப்பு மற்றையதின் பகுதிக்குள் பல தடவைகள் நுழைந்ததுண்டு.

அண்மையில் யாழ்.குடாநாட்டின் எல்லைப் புறத்தில் நடந்த சமரின்போது முகமாலைக்குள்ளும், கிளாலியிலும் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் புலிகள் ஊடுருவினர். கடல்வழியாகச் சென்று மண்டைதீவிலும் காலூன்றினர். ஆனால், அப்பகுதிகளில் தங்கியிருக்கவோ அல்லது அவற்றைத் தங்கள் கட்டுப்பாட்டில் தொடர்ந்து தக்க வைத்திருக்கவோ அவர்கள் முயலவில்லை. தமது தாக்குதல் நடவடிக்கை நோக்கத்தை நிறைவு செய்து கொண்டு கிளாலியிலும், முகமாலையிலும், மண்டைதீவிலும் தாம் முன்னேறிய பிரதேசங்களில் இருந்து புலிகள் விலகிக் கொண்டு விட்டார்கள்.

மூதூரிலும்கூட அதுதான் நடந்தது. அரசுப் படைகளைப் பின்வாங்கச் செய்து தாம் கைப்பற்றிய மூதூரை ஓரிரு நாள்களில் கைவிட்டு விலகினார்கள் புலிகள்.

ஆனால், அதற்கு மாறாக அரசுப் படைகளோ மாவிலாறிலும், சம்பூரிலும் தாம் புலிகளிடமிருந்து கைப்பற்றிய பிரதேசங்களைத் தக்க வைத்து - தமது கட்டுப்பாட்டில் பேண - முடிவுசெய்து விட்டமை அப்படியே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அதாவது, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் இரு தரப்புகளுக்கும் உரியவை என வகுக்கப்பட்ட பிரதேசங்களை - எல்லைகளை - இராணுவ நடவடிக்கை மூலம் முறித்து, புலிகளின் பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் செயற்பாட்டை முனைப்புடன் முன்னெடுத்த அரசுத் தரப்பு, இப்போது அதையும் தாண்டும் நிலையை நோக்கித் திட்டமிட்டுச் செயற்படுவதாகத் தோன்றுகின்றது. சம்பூரிலிருந்து மேலும் புலிகளின் பிரதேசத்துக்குள் நகர்வுகளைச் செய்யவும், முகமாலையிலிருந்து முன்னேறி ஆனையிறவுப் பகுதியை மீளக் கைப்பற்றவும் அரசுப் படைகளிடம் திட்டங்கள் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

இவை, அமைதிப் பேச்சுகளுக்கான - சமாதான முயற்சிகளுக்கான - கதவுகள் இறுக அடைத்துப் பூட்டப்படுவதற்கான சூழலைத் தோற்றுவித்துள்ளன.

யுத்த நிறுத்த ஒப்பந்தக் கால எல்லை வரையறைகள் பேணப்படாத நிலையில் எந்த அமைதி முயற்சிக்கும் இனி இடமில்லை என்று புலிகள் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கும் நிலையில் -

சம்பூரைக் கைப்பற்றியமை தென்னிலங்கை அரசுக்குக் கிடைத்த பெரு வெற்றியாகப் பிரகடனப்படுத்தி, அந்தப் பிரதேசத்தைத் தனது கட்டுப்பாட்டில் தொடர்ந்து தக்க வைத்திருப்பதில் அரசுத் தரப்பு அதிக ஆர்வமும், முனைப்பும் காட்டி வருவதால் -

தற்போதைய அமைதி முயற்சிகள் காலாவதியாகி, முற்றாகச் செயலிழக்கும் காலம் வந்துவிட்டது என்பது தெளிவாகத் தென்படுகிறது.

அமைதி முயற்சிகள் தொடரவும், யுத்த நிறுத்த ஒப்பந்தம் நிலை நிறுத்தப்படவும் 'படை வலுச் சமநிலை' அவசியமானது என்பதைத் தற்போதைய யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்த காலத்தில் இருந்தே அனுசரணைத் தரப்பான நோர்வே முதல் பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டி வந்தனர்.

பிணக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளில் ஒன்றின் தகைமையையும், தகுதியையும் பாதிக்குமாற்போல, ஒரு தலைப்பட்சமாகப் புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்தபோது அந்தப் படைவலுச் சமநிலைக்குப் பாதிப்பு ஏற்பட்டது.

அதன் பின்னர், இப்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை இராணுவ நடவடிக்கை மூலம் ஆக்கிரமித்து, அதைக் கைப்பற்றி வைத்திருப்பதன் வாயிலாக அந்தப் படைவலுச் சமநிலைக்கு மேலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன அரசுப் படைகள்.

சமநிலை குலைந்த இந்த வலு நிலைமையில் அமைதி முயற்சிகளுக்குப் புலிகள் வரமாட்டார்கள். அதையே தமிழ்ச்செல்வன் இப்போது நோர்வே அனுசரணைத் தரப்புக்கு விளக்கமாக எடுத்துரைத்திருக்கின்றார்.

சீர்கெட்ட வலுச் சமநிலையைச் சீர் செய்யும் விதத்தில் புலிகள் எடுக்கப் போகின்ற இராணுவக் காய்நகர்த்தல்கள் தென்னிலங்கைத் தரப்புக்குப் பேரிடியாக விழலாம். அது படைவலுச் சமநிலையைச் சீர்செய்வதற்குப் பதிலாக - மோசமாக - தலை கீழாக - மாறும் நிலைக்கு அதைத் தள்ளிவிடலாம்.

மாவிலாறு, சம்பூர் வெற்றிப் புளகாங்கிதத்தில் நினைத்து அதனைக் கொண்டாடும் தென்னிலங்கைத் தரப்பு, இவ்விடயம் குறித்தும் சற்றுச் சிந்திப்பது நல்லது.

# தமிழர் தாயகத்திலிருந்து படைகள் மிக விரைவில் விரட்டியடிக்கப்படும்

## அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

**தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஊடகவியலாளர் மத்தியில் நிகழ்த்திய உரையின் முதல் பகுதி நேற்றைய உதயனில் வெளியானீது. அதன் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகிறது.**

தமிழர் தாயகத்திலிருந்து சிங்களப்படைகள் மிகவிரைவில் விரட்டியடிக்கப்படும் நிலை முழு அளவில் உருவாகும்.

இவ்வாறு எச்சரித்துள்ளார் தமிழீழ விடு தலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பார் சு.ப.தமிழ்ச்செல்வன்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தலைமையிலான நோர்வே அனுசரணைக் குழுவினரைச் சந்தித்துப் பேச்சு நடத்திய அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றினார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இரு தரப்பும் வன்முறையை நிறுத்தி, யுத்த நிறுத்தத்தை மதித்து, சமரச முயற்சிகளைத் தொடரவேண்டும் என்று நோர்வேத் தூதுவர் எம்மிடம் கோரிக்கையை முன்வைத்தார்.

அது தொடர்பாக எமது நிலைப்பாட்டைத் தெளிவாக்கியுள்ளோம். யுத்த நிறுத்த ஒப்பந்த விதிகளை முற்றாகச் செயலிழக்கச் செய்யும் பாரிய ஆக்கிரமிப்பு நடவடிக்கையை அரசும், இராணுவமும் மேற்கொண்டுள்ளன.

### வலுச்சமநிலையில் கைச்சாத்திடப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம்

இரு தரப்புக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டு, இரு படை வலுச் சமநிலை யில்தான் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்தப் படை வலுச் சமநிலையைச் சீர்குலைக்கும் நடவடிக்கையாக இன்று சம்பூர்ப் பிரதேசத்துக்குள் இராணுவம் ஊடுருவி ஆக்கிரமித்து நிற்கிறது.

இதற்கு முடிவு கட்டாமல் இனி ஒருபோதும் சமரச முயற்சிகளுக்கோ, யுத்த நிறுத்த ஒப்பந்த அமுலாக்கத் துக்கோ வாய்ப்பில்லை என்ற எமது தலைமைப் பீடத்தின் நிலைப்பாடுதான் இன்று(புதன்) விளக்கப்பட்டது.

சமாதான காலத்தைப் பயன்படுத்தி, படைப் பலத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டு எமது தாயகப் பிரதேசத்துக்குள் பெரும் படையெடுப்புகளைச் செய்ய முனைந்து நிற்கிறது.

தமிழர் தரப்பு கொடுக்கும் நல்லெண்ண சமிக்ஞைகளைப் பயன்படுத்திக் கொண்டு அரசுத் தரப்பானது ஒவ்வொரு காலப் பகுதியிலும் - கடந்த காலங்களில் - இத்தகைய படையெடுப்பு நடவடிக்கைகளையே மேற்கொண்டு வந்துள்ளது.

முன்னைய ஆட்சிக் காலங்களை விட இப்போது இன்னும் ஒருபடி மேலே போய் மஹிந்த ராஜபக்ஷ அரசு இதனைச் செய்துகொண்டிருக்கின்றது. இதற்கான எதிர் விளைவை அவர் மிகவிரைவில் சந்திப்பார்.



சந்திரிகா அம்மையார் தனது ஆட்சிக் காலப் பகுதியில் உருவான சமாதான காலத்தில் இராணுவத்தைப் பலப்படுத்திக்கொண்டு இராணுவ வன்முறையை - அரச பயங்கரவாதத்தை - கட்டவிழ்த்து விட்டு, பின்பு அதற்குப் பாரிய விலை கொடுத்து சரணாகதி அடைந்த நிலைமைதான் இவர்களுக்கும் ஏற்படும் என்று நினைக்கிறேன்.

இன்று சம்பூரை ஆக்கிரமித்திருக்கலாம். ஆனால், நாளை பெருமளவு பிரதேசங்களிலிருந்து அரசுப் படைகள் விரட்டியடிக்கப்படும். அதற்கான காலம் மிக விரைவில் வரும்.

சந்திரிகா காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் வன்முறையைத் தூண்டினார்கள் என்றும், யுத்தத்தைத் தொடங்கினர் என்றும் பாரிய பரப்புரை கட்டவிழ்த்துவிடப்பட்டது. இம்முறை சர்வதேச சமூகத்துக்கு உண்மை தெளிவாகத் தெரியும்.

யார் யுத்தத்தைத் தொடங்கியிருக்கிறார்கள், யாருடைய பிரதேசம் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது, யார் படுகொலைகளையும், வன்முறைகளையும், பயங்கரவாதச் செயல்களையும் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள் என்பதை இன்று உலகத்துக்கு நாங்கள் புரிய வைத்திருக்கிறோம்.

இப்போது யுத்தநிறுத்தம் இருப்பதாகக் கூறிக் கொண்டே எமது பிரதேசங்களில் குண்டு வீச்சுகளும், இடம்பெயர்வுகளும், படுகொலைகளும், ஆக்கிரமிப்புகளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இதனை சர்வதேச சமூகத்துக்குப் புரிய வைத்துள்ளோம்.

ஆகவே, இதற்கான விளைவை மஹிந்த ராஜபக்ஷ எதிர் கொள்வார் என்பதில் சந்தேகமில்லை.

சம்பூருக்குள் ஊடுருவி ஆக்கிரமித்து அதனை ஒரு பெரிய வெற்றியாகச் சிங்கள மக்களுக்குக் காட்டி வெற்றிக் கொண்டாட்டங்களைக் கொண்டாடுகின்றனர்.

அரசும், இராணுவமும் படுதோல்வியை - பின்னடைவை - சந்தித்து மண்டியிடும் நிலை வரும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையில் உள்ளோம்.

அரசின் கபடத்தனத்தை முழு மக்களுமே இன்று புரிந்து கொண்டுள்ளனர். தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்ளவும், இந்த விடுதலைப் போராட்டத்தை வலுப்படுத்தவும் மக்கள் பெரிய அளவில் அணிதிரண்டு கொண்டிருக்கின்றனர்.

மிக விரைவில் சிங்களப் படைகள் விரட்டியடிக்கப்படும் நிலை முழு அளவில் உருவாகும்.'' - என்றார் சு.ப. தமிழ்ச்செல்வன்.

# பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் பணிகள் மட்டக்களப்பு, திருகோணமலையில் நிறுத்தம்

கொழும்பு, செப்.8

பட்டினிக்கு எதிரான நடவடிக்கைக் குழு எனும் பிரான்ஸ் நாட்டு தொண்டு நிறுவனம், இலங்கையில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தனது பணியை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

கடந்தமாத முற்பகுதியில் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில், திருகோணமலை மூதூர் பகுதியில் சண்டை மூண்டதை அடுத்து தனது உள்ளூர் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமையைத் தொடர்ந்து, இலங்கையில் தனது பணியை இந்நிறுவனம் தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தது. இப்போது அந்த நிறுவனம் இலங்கையில் மீண்டும் தனது பணிகளைத் தொடரவுள்ள போதிலும் பணிகளை கணிசமான அளவு குறைத்துக் கொள்ளப் போவதாக பட்டினிக்கு எதிரான நடவடிக்கைக் குழு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு உரையாற்றிய நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிஎரிக் போல்ட் கருத்து வெளியிடுகையில் -

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீண்டகால உதவித் திட்டங்கள் உட்படப் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களைத் தமது நிறுவனம் ரத்துச் செய்வதாகவும் -

அவசர உதவிப் பணிகளில் ஈடுபடுவதை மாத்திரமே நோக்கமாகக் கொண்டு பிராந்திய நடவடிக்கைத் தலைமையகங்கள் வேறு இடங்களுக்கு மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றன எனவும் -

அவர் தெரிவித்தார்.

''இலங்கையில் மனிதாபிமானப் பணிகளை ஆற்றுவதற்குரிய வெற்றிடத்தின் அளவு மிகவும் கணிசமான அளவில் குறைந்து வருகின்றது.

''அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைவதற்கான மார்க்கங்களும் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மோதல்களினால் மிகவும் சிக்கலாகிக் கொண்டிருக்கின்றன.

''மக்களைச் சென்றடைவது தொடர்பில் எமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் கிடையாது'' - என்றும் அந்தப் பிரதிநிதி தெரிவித்தார். (ஐ-12)

# எரிபொருள் தட்டுப்பாட்டினால் விவசாயம் பாதிப்பு

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தென்மராட்சி பிரதேசத்தில் விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயப் பயிர்கள் நீரின்றி வாடுவதாகவும்,இதனால் தமக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்குமாறு பிரதேச விவசாய போதனாசிரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (117)

# தொண்டர் ஆசிரியர் பிரச்சினைக்குத் தீர்வுகாண 'ஆசிரிய உதவியாளர்' என்ற பெயரில் புதிய பதவி

## கல்வி அமைச்சின் புதிய நடவடிக்கை

தொண்டர் ஆசிரியர்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் 'ஆசிரியர் உதவியாளர்' என்ற புதிய பதவியைப் உருவாக்குவதற்கு கல்வி அமைச்சு ஏற்பாடு செய்து வருகின்றது.

இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணப் குறிப்புக்குக் புறம்பாக தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பு செய்வது தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் இந்தப் புதிய பதவி உருவாக்கவும் -

அதன்பின்னர் தொண்டர் ஆசிரியர்களில் தகுதியானவர்களுக்கு நியமனம் வழங்கவும் கல்வி அமைச்சு ஏற்பாடு செய்து வருவதாகவும் கூறப்பட்டது.

ஆசிரியர் உதவியாளர் பதவியை புதிதாக ஏற்படுவதற்கு பொதுச்சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்க [illegible] என்று -

இதனையடுத்து அதற்கு அடுத்த நிலையில் அதற்கான அங்கீகாரத்தை பெற்று 'ஆசிரியர் உதவியாளர்' பதவியை உருவாக்கி செயற்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகவும் -

அதற்கான அங்கீகாரம் கிடைத்ததும் அது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்படலாம் என்றும் அறியப்படுகின்றது. (11)

# ஆலயத்தில் விளக்குவைத்துவிட்டு திரும்பிய வயோதிபர் சூட்டுக்குப் பலி!

தென்மராட்சி,செப்.8

மாலை வேளையில் ஆலயத்திற்கு விளக்கு வைத்துவிட்டு வீடு திரும்பிய வயோதிபர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியானார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்களன்று கொடிகாமம் எருவன் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதே இடத்தைச் சேர்ந்தவரும் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஆளணி உதவியாளராகக் கடமையாற்றி இளைப்பாறியவருமான கோவிந்த பிள்ளை சரவணமுத்து(வயது 67) என்பவரே பலியானவராவார்.

இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணைக்குச் சென்றவர் அடிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில்

மட்டுவில் வடக்கில் இடம்பெற்ற சுற்றிவளைப்புத் தேடுதலின் பின்னர் விசாரணைகளுக்கு வருமாறு படையினரால் அழைக்கப்பட்டவர் அடிகாயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்தவரான அன்ரனி தேவதாஸ் பிரதீபன் (வயது 22) என்பவரே இவ்வாறு அடிகாயங்களுக்கு இலக்காகிச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாயன்று மட்டுவில் வடக்குப் பகுதியில் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டபின்னர் விசாரணைகளுக்காக அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்களில் பிரதீபனும் ஒருவர் என்றும் கூறப்படுகின்றது. (ப-15-78-203)

## திருமண அழைப்பு
### (நாள் மாற்றம்)

*நிகழும் மங்களகரமான விய வருஷம்*
*ஆவணி மாதம் 5ஆம் நாள் (21.08.2006)*
செல்வன் ச.பகீரதசர்மா அவர்களுக்கும்
செல்வி இ.வினோஜா அவர்களுக்கும்
*நடைபெறவிருந்த திருமணம் ஆவணி மாதம் 25ஆம் நாள் (10.09.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8.58 மணிமுதல் காலை 10.58 மணிவரையும் வரும் சுபமுகூர்த்த வேளையில் மணமகள் இல்லத்தில் நடைபெறும்.*
*அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

(50600) *பெற்றோர்கள்:*

பிரம்மஸ்ரீ இராஜகோபால் சர்மா
கமலா தம்பதியினர்,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

பிரம்மஸ்ரீ சத்தியோசாத சர்மா
நகுலாம்பிகை தம்பதியினர்,
வீரகத்திப்பிள்ளையார் கோயில், கைதடி.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



*அமரர்*
*பண்ணாகம் பண்டிதர்*
**அ.ஆறுமுகம்**
தோற்றம் 16-12-1917 மறைவு 08-09-2004

விசவத்தனை முருகையா உங்கள் பாதக்கமலங்களில் பண்டிதர் ஆறுமுகம் பிள்ளைத் தமிழ் ஓதி வணங்குவதாக நினைவு கொள்கின்றோம்.

*பண்ணாகம்,*
*சுழிபுரம்.* (சி/50963)
**நினைவுச் சபையார்.**


## மெலிந்த சரீரத்திற்கு வலிமையான வளர்ச்சி

APPETON
WEIGHT GAIN™
சக்திமிகு பால்மா பானம்




எல்லா சிறப்புச் சந்தைகளிலும் நாடெங்கும் மருந்தகங்களிலும் விற்பனையாகின்றது.

ஏக பிரதிநிதிகள்
Suri Trading Company (Pvt) Ltd
Hotline: 0114810 251

the ad factory


## ஏழு நலன்புரி நிலையங்கள் தென்மராட்சியில் மூடப்பட்டன

தென்மராட்சி,செப்.8

தென்மராட்சி பிரதேசத்தில் எறிகணைத் தூக்குதல்கள் காரணமாக தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த பெருமளவு மக்கள் தமது இருப்பிடங்களுக்குச் சென்றதால் பிரதேசத்தில் இயங்கிய 7 நலன்புரி நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தில் தற்போது 9 நலன்புரி நிலையங்களே இயங்குவதாகவும் இந்த நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினர் உலர் உணவுப் பொருள்களையும் ஏனைய அத்தியாவசியப் பண்டங்களையும் வழங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ப-111)

## இப்படியும் நடக்கிறது வியாபாரம்

தென்மராட்சி,செப்.8

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வாங்குவதாயின் கடையில் உள்ள வேறு பொருள்கள் வாங்க வேண்டுமென வர்த்தகர்கள் வற்புறுத்துவதாக இப்பகுதியில் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

அன்றாட உணவுப் பொருள்கள் வாங்கவே கஷ்டமான நிலையில் உள்ள பொது மக்கள் மா, சீனி விற்பனை செய்யும் கடைகளில் நீண்டவரிசையில் நின்று பொருள்கள் வாங்குவதற்குச் சென்றால் கடையில் உள்ள வேறு பொருள்கள் வாங்கினால் மட்டுமே சீனி, மா வழங்கப்படுமென கூறப்படுவதாகவும் அப்பொருள்கள் வாங்குவதற்காக அத்தியாவசியப் பொருள்களின் அளவைக் குறைத்து வாங்க வேண்டியுள்ளதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (ப-117)

## நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு பொருள்கள் வழங்கினர்

தென்மராட்சி,செப்.8

தென்மராட்சிப் பிரதேச நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம், சேவாலங்கா, அலைன்ஸ் அபிவிருத்தி நிறுவனம் போன்ற நிறுவனங்கள் பொருள்களை வழங்கியுள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினர் உணவுப்பண்டம் அல்லாத பொருள்களும், சேவாலங்கா அலைன்ஸ் அபிவிருத்தி நிறுவனத்தினர் உலர் உணவுப் பொருள்களும் வழங்கியதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-111)

## யாழ்.மாநகர சபைக்கு புதிய ஆணையாளர்

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தின் புதிய ஆணையாளராக என்.சரவணபவ நேற்று முன்தினம் புதன்கிழமை பதவியேற்றுக்கொண்டார். என்.சரவணபவ முன்னர் வடக்கு - கிழக்கு மாகாணசபையின் உள்ளூராட்சி ஆணையாளராக பதவி வகித்தவராவார்.

யாழ். மாநகரசபையின் முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவ ஞானத்தின் ஒப்பந்தகாலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து என்.சரவணபவ ஆணையாளராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப-79-111)

## தவறிவிட்டது

*விழிசிட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்த கனகரத்தினம் ரவீந்திரகுமரன் என்பவரது விசேட அடையாள அட்டை (0907025534) 30-08-2006 அன்று மருதனார்மடத்திற்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'உடுவில் சுமநல கேந்திர நிலையம்' அல்லது மானிப்பாய் சத்திய சாயிசேவா நிலையத்தில் ஒப்படைத்து உதவவும்.*

# கள், சாராயம் தட்டுப்பாடு; கசிப்பு உற்பத்தி தாராளம்

தென்மராட்சி,செப்.8

தென்மராட்சி பிரதேசத்தில் கள், சாராயம் போன்ற மதுபானங்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

களவாக உற்பத்தி செய்யப்படும் கசிப்புப் போத்தல் 200 ரூபா வரை விற்பனை செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டது

தற்போதைய சூழ்நிலை காரணமாக பொலீஸார் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடாததால் பல இடங்களில் கசிப்பு விற்பனை சூடுபிடித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-117)

## பரிசுத்த ஆவிக்கு செபம்

**எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகள் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன்.**

*ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி.*

(58603) **விசுவாசி.**

## அன்பொளி கல்வியகம்
நீராவியடி - யாழ்ப்பாணம்

### வகுப்புகள் ஆரம்பம்

*09.09.2006 சனிக்கிழமை காலை 8 - 9.30 மணிமுதல் தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சை-2006 மாணவர் களுக்கும் (மீட்டல் வகுப்பு).*

*காலை 10-12.30 மணி தரம் - 4 மாணவர்களுக்கும் வகுப்புகள் ஆரம்ப மாகின்றன.*

(53597) - இயக்குநர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி
**கந்தவனம் தர்ஷிகா**
(மாணவி - கொக்குவில் இந்துக்கல்லூரி)



| சிந்தாமணி விநாயகர் அருளியது | சிந்தாமணி விநாயகர் கழல் சேர்ந்தது |
|---|---|
| 25.05.1990 | 23.08.2002 |

*திதி:08.09.2006*

*கந்தவனம் மனையில்*
*களித்தாடி மீண்டென்கால்*
*வந்திடுவாய் என்றே தான்*
*வரந் தந்தனுப்பினரோ?*
*சிந்தாமணி கஜனார்*
*செல்வி தர்ஷிகா மகளே!*
*சிந்தாமணியின் பாதம்*
*தித்திக்க வாழி அம்மா!*

'கவி போட்டோ'
நவாலி தெற்கு.
(53557)

**அப்பா, அம்மா,**
**சகோதர, சகோதரிகள்,**
**உற்றார், உறவினர்கள்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சறோஜினிதேவி வையாபுரி

நட்சத்திரம்: ஆவணி பூரட்டாதி

மலர்வு 29 - 09 - 1939
உதிர்வு 21 - 08 - 2005

*பன்னிரண்டு திங்கள் பறந்தோடியது அம்மா!*
*எண்ணிரண்டாண்டுகள் இடம்பெயர் வாழ்வினிலும்*
*கண்ணிரண்டும் இமை காப்பதுபோல் எமைக்காத்தாய்!*
*விண்ணகம் உன்னை விரைவாய் அழைத்ததேனோ?*
*மண்ணகத்தில் எம்வாழ்வு மலைபோல் சாய்ந்ததம்மா!*
*எண்ணத்தில் எந்நாளும் உன்நினைவால் எங்கள்*
*கன்னத்தில் வழிந்தோடும் கண்ணீர் துடைத்து*
*இன்னல் போக்கிட இனியொருமுறை வாராயோ!*

நிரந்தர முகவரி:-
**கல்லூரி வீதி,**
**காங்கேசன்துறை.**
தற்காலிகமுகவரி:-
**24, பொன்னப்பா ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**

என்றும் நினைவுடன்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

(53551)





எல்லா சிறப்புச் சந்தைகளிலும் நாடெங்கும் மருந்தகங்களிலும் விற்பனையாகின்றது.

Distributor Eastern Province
Ms Multi Power
Main Street, Maruthamunai.
Tel: 077 3040623, 077 6180567

Sole Agents:
Suri Trading Company (Pvt) Ltd
Hotline: 0114810 251


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனைகளுக்கமைவாக பாண் உற்பத்தி செய்யாத பேக்கரிகள் மீது நடவடிக்கை

## மேலதிக அரச அதிபரின் கண்டிப்பான அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ்.செயலகத்தால் பேக்கரிச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கம் ஊடாக வழங்கப்படும் மாவில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கமைவாகப் பாண் உற்பத்தியை மேற்கொள்ளாத பேக்கரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

யாழ்.செயலகத்தால் யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம், யாழ்.மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம் ஆகியவை ஊடாக பேக்கரிகளுக்கு மா விநியோகம் செய்யப்படுகின்றது. அத்துடன் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் சிபார்சுக்கமைவாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பேக்கரிகளுக்கும் மா விநியோகிக்கப்பட்டது.

மா விநியோகிக்கும் போது சில நிபந்தனைகள் பேக்கரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. 450 கிராம் நிறையுள்ள அச்சுப்பாண் மட்டுமே தயாரிக்கப்பட வேண்டும். வேறு உணவுப் பொருள்கள் எவையும் அந்த மாவைப் பயன்படுத்தித் தயாரிக்கக் கூடாது. பாண் ஒன்று 28 ரூபாவிற்கே விற்பனை செய்யப்பட வேண்டும். விற்பனை விலையை விலைப் பட்டியல் மூலம் காட்சிப்படுத்த வேண்டும் - ஆகிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டது.

இந்த நிபந்தனைகளை மீறிச் செயற்படும் பேக்கரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

சகல பிரதேச செயலகங்களும் கண்காணிப்புப் பணிக்கென உத்தியோகத்தர்களை நியமித்து பேக்கரிகளிற்கு நேரடியாகச் சென்று பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

மாவட்டச் செயலகமும் நிறுவைகள், அளவைகள் பிரிவு உத்தியோகத்தர்கள், நுகர்வோர் சங்க உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழுவை பேக்கரிகளைக் கண்காணிப்பதற்காக அனுப்பி வருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை எனது தலைமையிலான குழு மூலம் உடுவில் பிரதேச செயலரின் முறைப்பாட்டிற்கமைவாக அப்பிரதேச செயலகப் பிரிவில் இயங்கிய பேக்கரி ஒன்று பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது. அந்த பேக்கரி நிபந்தனைகளுக்கு அமைவாக செயற்படாமையால் பாண் உற்பத்தி அங்கு தடைசெய்யப்பட்டுள்ளது - என்றார் அவர். (ப-202)

## எரிபொருள் பெற விரும்பும் நிலையத்தைக் குறிப்பிட்டுப் பதிய வசதி உண்டு

நல்லூர்,செப்.8

மோட்டார் வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கான அனுமதி அட்டைகள் குறித்த பதிவுகள் தற்சமயம் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

வாகனப் பதிவுகள் எந்தப் பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தாலும் வாகனச் சொந்தக்காரர் தனக்கு வசதியான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அதனைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக எரிபொருள் விநியோக அட்டைக்கான விண்ணப்பப்படிவத்தில் எரிபொருளைப் பெறவிரும்பும் நிலையம் குறித்த தமது விருப்புதலைக் குறிப்பிட முடியும் என யாழ்.மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் எம்.பத்மநாதன் தெரிவித்தார். (ப-111)

## யூனியன் கல்லூரியைத் தனியார் நிலையமொன்றில் இயக்க முயற்சி

யாழ்ப்பாணம்,செப்.8

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை அடுத்த வாரம் தொடக்கம் தனியார் கல்வி நிலையம் ஒன்றில் இயக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகள் இயங்கத் தொடங்கி இரண்டு வாரங்கள் கடந்த போதிலும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இயங்கவில்லை.

இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இக்கல்லூரி இயங்குவதற்கான அனுமதியை இராணுவத்தினர் பாதுகாப்புக் காரணங்களைக் கூறி அனுமதிக்காத நிலையில் இந்த மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

முதற்கட்டமாக 9ஆம் தரத்திற்கு மேற்பட்ட 10, 11, 12, 13 ஆம் வகுப்புகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த இரு வாரங்களாக கல்லூரியை உயர்பாதுகாப்பு வலயத்தில் இயங்கச் செய்வதற்கு வேண்டிய பல்வேறு செயற்பாடுகளையும் இராணுவத்தினருடன் மேற்கொண்ட போதிலும் இராணுவத்தினர் அனுமதிக்காத நிலையில் ஆசிரியர்கள் பெற்றோர்களின் வேண்டுதலின் பேரில் முதற்கட்டமாக இவ்வகுப்புக்களை சுன்னாகம் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் இயக்க நட வடிக்கையினை மேற்கொண்டுள்ளார்கள்.

அடுத்த வாரம் முதல் இக்கல்லூரி தனியார் கல்வி நிறுவனத்தில் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ப-68)

## வடமராட்சி மாவீரர் துயிலுமில்லம் மூன்றாவது தடவையாகவும் சேதம்

கரவெட்டி,செப்.8

வடமராட்சி மாவீரர் துயிலுமில்லம் மூன்றாவது தடவையாகவும் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

வடமராட்சி எள்ளன்குளம் மாவீரர் துயிலும் இல்லமே இவ்வாறு ஒரு வார காலத்திற்குள் மூன்று தடவைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

முதல் இரு தடவைகளும் மாவீரர் இல்லத்தின் வெளிச்சுற்று மதில்களில் இருந்த பெறுமதிமிக்க மின்குமிழ்கள் சேதமாக்கப்பட்டிருந்தன.

மூன்றாவது தடவையாகக் கடந்த திங்கட்கிழமை ஊரடங்கு அமுலில் இருந்தவேளை பெயர்ப்பலகை உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன் மாவீரர் துயிலுமில்ல நுழைவாயிலில் இருந்த மின்குமிழ்களால் அமைக்கப்பட்டிருந்த பெயர்ப்பலகையும் சேதமாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நுழைவாயில் கேற்றும் உடைக்கப்பட்டு திறந்துவிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மாவீரர் இல்லத்தில் வளர்க்கப்பட்டிருந்த பூஞ்செடிகளை கால்நடைகள் அழித்து வருவதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டது. (ப-70-203)

## வெங்காய ஏற்றுமதி தடங்கலால் உற்பத்தியாளர்கள் கவலை

### உள்ளூரில் விலைகளும் படுவீழ்ச்சி

தென்மராட்சி,செப்.8

குடாநாட்டில் உற்பத்தியாகும் வெங்காயத்தை தென்பகுதிக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால் பெருமளவில் வெங்காயம் தேக்கமடைந்து வருவதுடன் வெங்காயத்தின் விலையும் உள்ளூரில் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் வெங்காயச் செய்கையாளர்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

சந்தைகளில் தற்போது பெரிய வெங்காயம் கிலோ இருபது ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயம் தற்போது அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் வெங்காயத்தின் விலை மேலும் வீழ்ச்சியடையலாமென உற்பத்தியாளர்கள் அஞ்சுகின்றனர்.

உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தைத் தென்னிலங்கைக்கு கொண்டு செல்ல முடியாததால் அதன் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் இரு தினங்களுக்கு முன்னர் தென்மராட்சி சந்தைகளில் 60 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ப-117)

## பழுதான உணவுப் பொருள் விற்பனை நடைபெறுகிறதா? அருகிலுள்ள சுகாதார அலுவலகத்துக்கு அறிவிக்கவும்

### பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,செப்.8

பழுதடைந்த மற்றும் தரக்குறைவான உணவுப் பொருள்களை விநியோகிக்கும் வியாபாரிகள் மற்றும் வியாபார நிலையங்கள் பற்றிய தகவல்களைப் பொதுமக்கள் உரிய வியாபார நிலையங்கள் அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்குத் தெரியப்படுத்தினால் உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் நிலவும் அசாதாரண நிலைமை காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதனால் சில வியாபாரிகள் பழுதடைந்த உணவுப் பொருள்கள் மற்றும் காலாவதியான உணவுப் பொருள்களை விற்கிறார்கள் என பொதுமக்கள் பலர் பல இடங்களில் இருந்தும் தமக்கு கடிதங்களை அனுப்பி வருவதாகவும் அதனால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள சில பேக்கரிகளும் தரம் குறைவாக பாண் மற்றும் பிஸ்கட் வகைகளை விநியோகிப்பதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ப-51)

## தென்மராட்சி முகாம்களிலிருந்தும் ஷெல், பல்குழல் தாக்குதல்

தென்மராட்சி,செப்.8

தென்மராட்சி பிரதேச படை முகாம்களிலிருந்து நேற்று முன்தினம் காலை தொடக்கம் ஷெல் மற்றும் பல்குழல் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

நாகர்கோயில், முகமாலை, பூநகரி ஆகிய பகுதிகளை நோக்கி தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

இவற்றின் சத்தம் தென்மராட்சி பிரதேசத்தில் பெரும் அதிர்வினை ஏற்படுத்துவதுடன், குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கும் கேட்டதாகச் செய்திகள் தெரிவித்தன.(ப-117)

## 30 வருடங்களாக திருத்தப்படாத வீதி

தென்மராட்சி,பெப்.8

மட்டுவில் வடக்கு, மெய்கண்டான் வீதி கடந்த 30 வருடங்களாக திருத்தப்படாமல் உள்ளதால் இவ்வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் கனகன்புளியடி - சரசாலை வீதி போக்குவரத்திற்கு தடைசெய்யப்பட்டதால் கனரக வாகனங்கள் மட்டுவில் மெய்கண்டான் வீதியைப் பயன்படுத்தி வந்தன. இதனால் இவ்வீதி மோசமாக சேதமடைந்து மழை காலங்களில் மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப-117)

## அனலைதீவு செல்லும் அரச ஊழியர் எதிர்கொள்ளும் பயணப் பிரச்சினை

நல்லூர்,செப்.8

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனையில் இருந்து அனலைதீவுக்குப் புறப்படும் காலை நேரப் படகுச் சேவை தற்சமயம் நிறுத்தப்பட்டுள்ளதால் அங்கு பணி புரியும் உத்தியோகத்தர்கள் தமது கடமைக்குச் செல்ல முடியாதிருப்பதாகக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பகுதிகளில் இருந்து அனலைதீவுக்குக் கடமைக்காகச் செல்லும் உத்தியோகத்தர்கள் அங்கு தங்கி நிற்கக் கூடிய வசதிகள் இன்மையால் பிற்பகல் அனலைதீவில் இருந்து புறப்படும் படகின் மூலம் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வது வழமை. அப்படித் திருப்புபவர்கள் தமது வழமையான காலைப் பயணத்தில் அனலைதீவுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். (ப-111)

## நலன்புரி நிலைய சுற்றுப்புறத்தில் சுகாதாரச்சீர்கேடு

கரவெட்டி,செப்.9

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் அமைந்துள்ள நலன்புரி முகாமில் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு இப் பாடசாலையில் தற்காலிக முகாம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த முகாமில் உள்ள மக்கள் தமது தேவைகளுக்கு மலசலகூடங்களை பாவனை செய்யாது பாடசாலையின் சுற்றுப்புறங்களில் மலசலங்களைக் கழிப்பதால் அங்கு சுகாதாரச்சீர்கேடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் இவ்விடயத்தில் கவனம் எடுத்து சுகாதாரச் சீர்கேட்டைத் தடுத்து நிறுத்தி தொற்றுநோய்கள் ஏற்படாது தடுக்க முன்வரவேண்டுமென சுற்றுப்புறங்களில் வாழ்கின்றவர்கள் கேட்டுள்ளனர். (ப-70-203)

## களவுபோன பொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ்.இந்துக்கல்லூரிக்கு அண்மையில் சில தினங்களின் முன்னர் களவாடப்பட்ட பொருள்களில் ஒரு தொகுதி மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞர்கள் இராணுவத்தினரின் உதவியுடன் பொம்மைவெளி 3ஆம் குறுக்குத் தெருவிலுள்ள இரண்டு வீடுகளிலிருந்து இந்தப் பொருள்களை மீட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப-203)

## சோமஸ்கந்தாவின் பவள விழா

யாழ்ப்பாணம்,செப்.8

புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியின் பவளவிழாவும் பரிசில் வழங்கலும் நிறுவுநர் நினைவு நாள் நிகழ்வுகளும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி முதல்வர் வ.ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், முன்னாள் உதவிப் பிரதேச செயலர் க.இராசதுரை, வலி.கிழக்கு ப.நோ.கூ.ச. முன்னாள் தலைவர் அ.க.த.கிருஷ்ணராஜா, இளைப்பாறிய கணக்காய்வு அத்தியட்சகர் ஆ.சுந்தரலிங்கம், தர்மகர்த்தா சபை உறுப்பினர்களான ம.சத்தியபாலன், சு.தில்லைச் சிவலோகநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ப-203)

## வங்கிகளிலேயே ஓய்வூதியர்கள் தமது 'வவுச்சர்'களைப் பெற்றுக்கொள்ளலாம்

### தென்மராட்சி செயலகம் ஏற்பாடு

தென்மராட்சி,செப்.8

தென்மராட்சிப் பிரதேச ஓய்வூதியர்களுக்கான செப்ரெம்பர் மாத ஓய்வூதிய கொடுப்பனவுக் கட்டளைகள் (வவுச்சர்கள்) அந்தந்த வங்கிகளில் வழங்க பிரதேச செயலகத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக ஓய்வூதியர்கள் பலர் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ளதையடுத்து இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்,

ஓய்வூதிய தினமான செப்ரெம்பர் 12 ஆம் திகதிஓய்வூதியம் பெறும் வங்கியில் தமது வவுச்சர்களைப் பெற்றுக்கொள்ளலாமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (ப-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்புனர்வாழ்வுக் கழக நிதி முடக்கத்தை புலம்பெயர் தமிழர்கள் கண்டிக்க வேண்டும்

வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களை பட்டினிபோட்டு அழிப்பதற்கான நடவடிக்கையே தமிழர்புனர்வாழ்வுக் கழக நிதி முடக்கம் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி சாடியுள்ளார்.

இது தொடர்பில் அவர் "புதினம்" இணைத் தளத்துக்கு அளித்துள்ள நேர-காணல் வருமாறு:

*கேள்வி:* இலங்கை மத்திய வங்கி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்குகளை முடக்கி வைத்துள்ளதற்கு காரணம் என்ன?

*ப:* உண்மையில் எதற்காக முடக்கி வைக்கப்பட்டுள்ளது என்பதை அரசு எமக்கு அறியத்தரவில்லை. ஆனால், இவ் விடயம் தொடர்பான செய்திகள் வந்தபின்னர் இலங்கை மத்திய வங்கி மற்றும் சில அதிகாரிகள் நாம் விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவி செய்கின்றோம் எனவும் இந்த அடிப்படையில்தான் முடக்கத்தினை மேற்கொள்ளப் பட்டதாகவும் கூறியுள்ளனர்.

*கே:* இதனால் உங்களுக்கு உடனடியாக ஏற்பட்ட பாதிப்பு என்ன?

*ப:* நாங்கள் எமது தாயகத்தில் செய்து வந்த ஆழிப்பேரலை மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான திட்டங்கள் செய்யமுடியாது தடைப்பட்டுள்ளன. அத்துடன் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள், பணியாளர் சம்பளங்கள், சிறுவர் இல்லங்கள் ஆகியவற்றிற்கான கொடுப்பனவுகள் என்பனவற்றை கொடுக்க முடியாதுள்ளது. இதனால் பாதிக்கப்படப் போவது மக்களும் சிறுவர்களுமே ஆவர்.

*கே:* நீங்கள் இது தொடர்பாக என்ன நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கின்றீர்கள்?

*ப:* நாங்கள் இது தொடர்பாக அனைத்து உதவி வழங்கும் நிறுவனங்களுக்கும் மற்றும் தூதரகங்கள், ஸ்ரீலங்காவின் உயர் அரச அதிகாரிகள் ஆகியோர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பது தொடர்பாக எமது சட்ட ஆலோசகர்களை அணுகியிருக்கின்றோம்.

*கே:* எவ்வளவு நிதி முடக்கப்பட்டுள்ளது எந்தெந்த திட்டங்களுக்கானவை எனக் கூறமுடியுமா?

*ப:* ஏறக்குறைய 78 மில்லியன் ரூபாய் இதில் 90 வீதமான நிதி சர்வதேச நிறுவனங்களின் மூலம் கிடைக்கப்பெற்ற திட்ட நிதியாகும்.

புலம்பெயர்ந்து வாழும் மக்கள் அனுப்பிய நிதி ஏறக்குறைய 70 இலட்சம் ரூபா மட்டுமேயாகும். இது வாகரையில் இடம் பெயர்ந்த மக்களின் நிவாரணப் பணிகளுக்காக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளால் அனுப்பப் பட்டவை ஆகும்.

*கே:* எதிர்வரும் காலத்தில் புலம்பெயர் நாடுகளில் வதியும் மக்கள் எவ்வாறு தமது உதவிகளைச் செய்யமுடியும், எவ்வாறு நீங்கள் அதனை செய்வீர்கள்?

*ப:* மக்கள் தமது பங்களிப்புக்களை எதுவித தடைகளுமின்றி செய்யவேண்டும், அந் தந்த நாடுகளில் இயங்கும் புனர்வாழ்வுக்கழகம் ஊடாக செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நாம் எமது மக்களுக்கான வேலைத் திட்டங்களை எப்படியாயினும் செய்வோம். நிதியை அனுப்புவதற்கு உரிய மாற்று ஏற்பாட்டைச் செய்திருக்கின்றோம்.

*கே:* விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரிக்கிறீர்கள் எனவும், ஆழிப் பேரலைக் காலப் பகுதியில் இராணுவ உபகரணங்களை கொண்டு வந்தீர்கள் எனவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன அது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

*ப:* இல்லை, இது தவறானது இப்படியான செய்திகளின் பிறப்பாக்கம் தென்னிலங்கையின் சில இனவிரோத செயற்பாட்டை ஊக்குவிக்கும் ஊடகங்கள், ஊடகத்துறை சார்ந்த ஒரு சில நபர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

இவர்கள் தென்னிலங்கை இனவாத வலைக்குள் சிக்குப்பட்டவர்களாக, பணத்துக்காக தனிநபர் பிரபல்யத்திற்காக செயற்படுபவர்களாக செயற்படுகின்றனர். இவர்களின் தோற்றமும் உருவாக்கமும் செயற்பாடுகளும் துரதிஷ்டவசமானது.

ஆழிப்பேரலை காலப்பகுதியில் தமிழ் மக்களிடம் நிதி சேகரித்தது உண்மை. அதேநேரம் உலகத்தில் பரந்து வாழும் தமிழ்மக்கள் ஏன் சிங்கள, முஸ்லிம் மக்கள் கூட அந்தந்த நாட்டு அரசுகளின் அனுமதியுடன் தாமாக தமது அமைப்புகளூடாக நிதி சேகரித்து தந்துள்ளார்கள். இவர்களுக்கு புனர்வாழ்வுக் கழகம் எவ்வாறான வேலைகளை செய்தது என்ற விவரங்கள் அடங்கிய அறிக்கையை அனுப்பியுள்ளோம்.

### சட்ட ரீதியாகவே நிதி சேர்த்தோம்

புலம்பெயர் நாடுகளில் உள்ள மக்கள் அமைப்புகள் சட்டரீதியாகத்தான் நிதி சேர்த்தார்கள் நாம் அவர்களிடமிருந்து சட்டரீதியாகவே அவற்றை பெற்றிருந்தோம்.

நிதி உதவி செய்தவர்கள் எமது வேலைத் திட்டங்களை நேரடியாக பார்வையிட்டு திருப்தியடைந்து இருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரிப்பது என்பது தவறானது. எமது பணி அதுவல்ல. அவர்கள் இதற்கென வலுவான கட்டமைப்புக்களை வைத்திருக்கின்றனர் என அறியமுடிகின்றது.

எமது செயற்பாடு வெளிப்படையாக வங்கி மூலமாகவே இருக்கின்றது. இது இவ்வாறு இருக்க எதுவித ஆதாரங்களும் இன்றி இவ்வாறான குற்றச்சாட்டுக்களை தெரிவிப்பது கண்டிக்கத்தக்கது. இனி நாம் இவ்வாறு பொய்க்குற்றச்சாட்டு தெரிவிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளோம்.

*கே:* ஆழிப்பேரலைக் காலப்பகுதியில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் தரும் பொருள்களை கொண்டு வந்தீர்கள் என செய்திகள் வெளியாகி இருந்தன. இது தொடர்பாக உங்கள் கருத்து?

*ப:* இது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து அல்ல. இவ்வாறான குற்றச்சாட்டுக்களை சுமத்துபவர்கள் தாங்கள் முட்டாள்கள் என்பதனை மேலும் மேலும் நிரூபித்துக் கொண்டிருக்கின்றனர்.

புனர்வாழ்வுக் கழகம் கொழும்புத்துறை முகமூடாகவே அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்கொண்டது. இது அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் பாதுகாப்புத்துறை சுங்கத் துறையின் கண்காணிப்பில் இருப்பதாக நாம் நம்புகின்றோம்.

இவர்கள், எமக்கு வரும் பொருள்களை விசேடமாக பரிசோதித்து அனுப்புகின்றனர்.

சில பொருள்கள் இராணுவ பாவனைக்கானது என சந்தேகப்பட்டு தடுத்து வைத்திருந்தமை உண்மை. அதாவது, படகு உற்பத்திப் பொருள்கள், குடிதண்ணீர் குடம், எக்ஸ்-றே இயந்திரம்.

இவை இலங்கையில் எல்லா இடமும் விலை கொடுத்து வாங்கக்கூடிய பொருள்கள் என ஸ்ரீலங்கா காவல்துறை ஆய்வின் போது கண்டுபிடித்து 2-3 மாதங்களில் ஒரு பகுதிப் பொருள்களைத் திருப்பி தந்திருந்தது. ஆனால் துரதிஷ்டவசமாக 50 விழுக்காடு பொருட்கள் பாவிக்கமுடியாதவையாக இருந்தன.

தற்போது சில பொருள்கள் இன்னமும் திருப்பித்தரப்படவில்லை. ஸ்ரீலங்கா அரசின் கீழ் இயங்கும் பல அமைச்சுக்கள் இப் பொருள்களை புனர்வாழ்வுக் கழகத்திற்கு வழங்குமாறு கூறியும் ஸ்ரீலங்கா சுங்கத் திணைக்களம், பாதுகாப்புத் திணைக்களம், என்பன இன்னமும் அவற்றைச் திருப்பித் தரவில்லை.

இப்பொருள்கள் எங்கு இருக்கின்றன என்ற விவரமும் தெரியாது. அரச களஞ்சியத்திலா அல்லது தனிப்பட்ட அதிகாரிகளின் களஞ்சியத்திலா என்று கேட்கவும் முடியாது.

*கே:* நிதி மற்றும் பொருட்கள் பெறுவதிலும் அதனூடாக செய்யப்படுகின்ற செயற்பாட்டிலும் நீங்கள் உங்கள் வெளிப் படைத்தன்மையை எவ்வாறு பேணுகின்றீர்கள்?

*ப:* வெளிப்படைத்தன்மை, வகை கூறல் என்பன ஒரு நிறுவனத்தின் உண்மையான செயற்பாட்டிற்கு அவசியம் என கருத்திற் கொண்டு அணுகினால் அது வரவேற்கத் தக்கது. மறுபுறமாக அதனை ஓர் ஆயுத மாகப் பாவித்து மனிதாபிமான செயற்பாடுகளை முடக்கும் அணுகுமுறையாக இருந்தால் அது புறந்தள்ளத்தக்கது.

இரண்டாவதாகக் கூறிய அணுகு முறையே பலராலும் மேற்கொள்ளப்படுவது எமக்குத் தெரியும். எனினும், நாம் புறந் தள்ளுவது இல்லை. கூடியளவு அனைத்துச் செயற்பாட்டினையும் செய்கின்றோம்.

நிதி பெறுபனவு செலவு விவரங்கள், திட்டங்கள், திட்ட முன்னேற்றங்கள் உள்ளடங்கலான அறிக்கைகள் கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. பெறப்பட்ட பொருட்கள் அனைத்தும் எமது ஆண்டறிக்கையில் உள்ளன.

நிதி உதவி செய்பவர்கள் எமது நிதி அறிக்கையையும், வேலைத்திட்டங்களையும் நேரடியாகச் சென்று பார்க்கின்றனர், பார்க்கவும் முடியும்.

குறிப்பாக ஆழிப்பேரலைக் காலப்பகுதியில் பூரணமான தகவல்களை உடனுக்குடன் வெளியிட்ட நிறுவனங்களில் நாமும் ஒன்று.

### சில ஊடகங்களின் புரட்டு

*கே:* நீங்கள் இவ்வாறு கூறுகின்றீர்கள். ஆனால், சில ஊடகங்கள் ஏன் இதற்கு முரண்பாடான கருத்தை தெரிவிக்கின்றன?

*ப:* அது ஒரு சிலரின் தொழில். ஆனால் எமக்குத் தெரியும் அவர்கள் திட்டமிட்டு எமது செயற்பாட்டினைக் குழப்பி எமக்கு சர்வதேச ரீதியாக இருக்கும் நன்மதிப்பைப் பாதிக்க திட்டமிட்டுச் செயற்படுகின்றார்கள்.

உதாரணமாக எந்தவொரு நபரோ அல்லது ஊடகங்களோ இதுவரை குறிப்பாக எதனையும் கூறவில்லை.

அதாவது, விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி செய்திருந்தோம் எனில், எங்கு எப்போது எவ்வளவு செய்திருக்கின்றார்கள் என்றோ? அல்லது வெளிப்படைத்தன்மை இல்லை என்றால் எந்த விடயத்தில் இல்லை என்றோ கூறுவதில்லை.

ஆகவே, ஆதாரபூர்வமாக இல்லாமல் செய்தியாக கூறுவதானது உள்நோக்கம் கொண்ட திட்டமிட்ட செயலாகவே நாம் பார்க்கின்றோம்.

## பணிப்பாளர் றெஜி கோருகிறார்



*கே:* சில வெளிநாட்டு அமைப்புகளும் புனர்வாழ்வுக் கழகத்தை விடுதலைப் புலிகளின் ஓர் அமைப்பாகவே கூறுகின்றனவே?

*ப:* ஆம், சிலர் தமக்கு ஏற்றவாறு பாவிக்கின்றனர்.

நகைப்பிற்கு இடமானவைதான். ஆனால் நாம் முடிந்தளவில் அவர்களுக்கு தெளிவு படுத்துகின்றோம்.

நாம் இவ்வாறு கூறுபவர்களை ஏன் இவ்வாறு அழைப்பதற்கு என்ன காரணம் என கேட்டபோது தமது கணிப்பீடுகளை சொன்னார்கள்.

ஓர் அமைப்பின் பிரதிநிதி (கனடா) தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிகழ்ச்சிகளில் விடுதலைப் புலிகள் கலந்துகொண்டதற்கு ஆதாரம் இருக்கிறது எனவும் விடுதலைப்புலிகளின் வழிநடத்தலில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் செயற்படுகிறது எனவும் ஆகவே, நீங்கள் விடுதலைப்புலி களின் பிரிவு எனக்கூறினார்.

ஆனால், அவர்களின் நிதி உதவி செய்யப்பட்ட திட்டங்களை விடுதலைப் புலிகள் திறந்துள்ளனர். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் எந்தவொரு நிறுவனம் என்றாலும் விடுதலைப் புலிகளின் ஆலோசனை பெற்றே செய்யவேண்டும். அவர்களின் பிரதிநிதிகள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள் இது வழமை.

(வளரும்)

## நினைத்தபடி கட்டணம் அறவிடும் சிற்றூர்திகள்

குடாநாட்டில் எரிபொருள் தட்டுப்பாட்டினையடுத்து தனியார் சிற்றூர்திச் சேவை வாகனங்கள் திடீரென பயணக் கட்டணத்தினை அதிகரித்துள்ளன. இதனால் பொதுமக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. சிற்றூர்தி நடத்துநர்கள் தாங்கள் நினைத்த கட்டணத்தை அறிவிடுவதாகவும் சிற்றூர்திகளில் பயணக் கட்டணம் அதிகரிப்பு தொடர்பான எந்தவொரு அறிவித்தலும் இல்லாத நிலையில் குறைந்த அளவு பணத்துடன் செல்லும் பொதுமக்கள் பஸ் நிலையங்களில் தெரிந்தவர்களிடம் கடனாகப் பணம் வாங்கி பயணத்தை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ப-117)

## மின்சாரம் சீரில்லை; மக்கள் சிரமம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஒரு வாரமாக மின்சார விநியோகம் சீரின்மையால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை இப்பிரதேசத்தில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் வேளையில் மின்சாரம் தடைப்படுவதால் திணைக்கள அலுவலகங்கள் குறித்த நேரத்திற்குள் தமது கருமங்களை செய்து முடிக்க முடியவில்லை எனவும் அத்தியாவசிய பணிகள் யாவும் கையினால் எழுதியே அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது அலுவலக நடவடிக்கைகள் கணனி மயப்படுத்தப் பட்டுள்ளதால் தேவையான புள்ளிவிவரங்களைப் பெற முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ப-117)

## மரண அறிவித்தல்



### சுரேஸ்குமார் எழில்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சுரேஸ்குமார் எழில் அவர்கள் நேற்று (07-09-2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் குணநாயகம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், இறைவரித் திணைக்களம்) - ஞானசக்தி தம்பதியரின் அன்பு மகளும் சுரேஸ் குமாரின் அன்பு மனைவியும் கீர்த்திகாவின் அன்புத் தாயும் யாழினி - தேவராஜன் (நோர்வே), கோகிலன் (லண்டன்), அகிலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

கு.குணநாயகம்,
கொட்டகலை,
051 2222332 (53605)

தகவல்:
கு.இராசநாயகம்
(உரும்பிராய்).

சிவமயம்

## திருமண அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் மங்கலகரமான விய வருடம் ஆவணி மாதம் 25ஆம் நாள் (10.09.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8.28 மணி முதல் 10.28 மணி வரையுள்ள ரேவதி நட்சத்திரமும், அமிர்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில் நல்லைக் கந்தன் அருட்கடாட்சத்தால்

நாதஸ்வர கலாநிதி, அளவையூர் N.K பத்மநாதன் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் திருவளர் செல்வன்

**பாலேந்திரன்** அவர்களுக்கும்



நாதஸ்வர வித்துவான், இணுவில் U. பாலகிருஷ்ணன் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி திருவளர் செல்வி

**மோகனரஞ்ஜினி** அவர்களுக்கும்

திருமாங்கல்யதாரணம் இணுவில் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற திருவருள் கிட்டி பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தங்களுக்குரிய தனிப்பட்ட அழைப்பாக தயவு கூர்ந்து ஏற்றுக் கொள்ளவும்)

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி. N.K. பத்மநாதன் குடும்பத்தினர்
199/4, சில்வர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி. U. பாலகிருஷ்ணன் குடும்பத்தினர்
கந்த சுவாமி கோவிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.

(இரு வீட்டார் அழைப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொழும்பில் கடத்தப்பட்ட வர்த்தகர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோருகிறார் மகேஸ்வரன்

கொழும்பு,செப்.8 கொழும்பில் தமிழ் வர்த்தகர்கள், இளைஞர், யுவதிகள் கடத்தப்படுவதற்கான பொறுப்பை அரசே ஏற்கவேண்டும். கருணா குழு கொழும்பில் முகாமிட அரசே இடமளித்துள்ளது. எனவே, கடத்தப்பட்டவர்களை விடுவிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் நேற்று முன்தினம் சபையில் பேசும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீது அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

யாழ்.குடாநாடு கடந்த 11ஆம் திகதி முதல் பாதுகாப்பு படையினரால் முற்றுகையிடப்பட்டுள்ளது. ஊரடங்கு பிறப்பிக்கப் பட்டுள்ளது. மக்கள் இடம்பெயரமுடியாத வகையில் பிரதேசத்துக்கு பிரதேசம் வெவ்வேறு நேரத்தில் ஊரடங்கு நீக்கப்படுகிறது. நோயாளிகள், வெளிநாடு செல்லவுள்ளோர், உத்தியோகத்தர்கள் எனப் பலர் யாழ். குடாநாட்டில் சிக்கித் தவிக்கின்றனர். இவர்கள் வெளியேற அரசு வசதி செய்யவேண்டும்.

சம்பூரை வெற்றிகொண்டுவிட்டோம் என வீரமுழக்கமிடும் அரசு இழப்புகளையும் சந்திக்க நேரிடும். யாழ்.குடாநாட்டில் பாதுகாப்பு படையினர் எதிர்ப்பட்ட இளைஞர்களை சுட்டு வீதிகளில் எறிகின்றனர். அல்லைப்பிட்டியில் யுவதிகள் உட்பட பலர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களது உடல்கள் மீட்கப்படாமல் அப்பகுதி முழுவதும் துர் நாற்றம் வீசுகின்றது.

கொழும்பில் தமிழ் வர்த்தகர்கள் கடத்தப் படுகின்றனர். அவர்களிடமிருந்து கப்பம் கோரப்படுகின்றது. 25 நாள்களுக்கு முன் சீனி வர்த்தகர் கடத்தப்பட்டார். இவர் கருணா குழுவால் கடத்தப்பட்டுள்ளார். ஜனாதிபதியும், அரசும் இக்குழுவுக்கு ஆதரவு வழங்குகின்றது. இது ஒரு ஜனநாயக அரசா என்ற சந்தேகம் எழுகின்றது.

தமிழர்களை அழித்தொழிக்கும் இன ஒழிப்பு நடவடிக்கையையே அரசு மேற்கொள்கின்றது. எத்தனை நாள்களுக்கு இதைச் செய்வீர்கள். எத்தனை நாள்களுக்குத் தமிழர்களைக் கடத்துவீர்கள். கடத்தல் குழுவுக்கு இராணுவமும், பொலிஸும் உதவி புரிகின்றது. இதற்கெல்லாம் ஒரு நாளைக்கு நீங்கள் பதில் கூறவேண்டிய நிலை ஏற்படும்.

யாழ். குடாநாட்டில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட பின்னர் ஆயிரம் பேரளவில் கொல்லப்பட்டுள்ளனர். எனவே, அங்கு இயல்பு நிலை ஏற்படுத்தப்படவேண்டும். இராணுவ கெடுபிடிகள் குறைக்கப்படவேண்டும். அங்கு சிக்கியுள்ள மக்கள் வெளியேற வழி செய்ய வேண்டும்.

இலங்கையில் இடம்பெறுபவற்றை தமிழக மக்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கின்றனர். ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின்னர் இப்போது தமிழகத்திலும் இந்தியாவிலும் நிலைமை மாற்றம் பெற்று வருகின்றது. அங்கு ஆர்ப்பாட்டங்கள் இடம் பெறுகின்றன - என்றார்.

(ஐ - 2)


## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

### அவசர கலந்துரையாடல்

சகல வெதுப்பக உரிமையாளர்களையும் 09.09.2006 சனிக்கிழமை அன்று மு.ப 11 மணிக்கு சங்கத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். சில முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாட வேண்டி இருப்பதால் குறித்த நேரத்திற்கு அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**குறிப்பு:**- வெதுப்பக உரிமையாளர்களும் தங்களால் உற்பத்தி செய்யப்படும் 450 கிராம் பாண் ரூபா 28/= க்கு விற்பனை செய்யப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

-நிர்வாகம்


## பாடசாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்திருக்கும் அறிவிப்பு எங்களது நிம்மதியான வாழ்விற்கும் கல்விக்கும் தடை போடும் செயலாகவே நாம் எண்ணவேண்டியுள்ளது.

ஏ-9 வீதி திறக்கப்படும்வரை நாங்கள் பாடசாலைகளை பகிஷ்கரிக்க வேண்டுமாம். இதுதான் மாணவர் ஒன்றியத்தின் பெயரால் விடுக்கப்பட்டிருக்கும் வேண்டுகோள்.

ஏ-9 வீதி மூடப்படுவதற்கு காரணமாக இருந்த குழப்பங்களுக்கும் பதற்றச் சூழலுக்கும் யுத்த முனைப்புகளுக்கும் இது போன்ற பாடசாலை பகிஷ்கரிப்புகளே ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தன. கல்விச் சமூகத்தை அச்சுறுத்தி பலாத்காரமாக மாணவர்களை பகிஷ்கரிப்புகளில் ஈடுபடுத்தி, இராணுவத்தினரின் சோதனைச் சாவடிகளுக்கு கல்லெறிந்து, பின் குண்டை எறிந்து, வீதிகளில் ரயர் கொழுத்தி, மாணவர் பெயரால் இராணுவத்திற்கு எச்சரிக்கை விடுத்து இவ்வாறு தொடங்கிய பதற்றச் சூழலில் இருந்து திட்டமிட்டு உருவாக்கப்பட்டதுதான் அண்மைக்கால பாரிய போர் அனர்த்தம். இதுவே ஏ-9 வீதி மூடப்படுவதற்கு காரணமாக இருக்கின்றது.

மாணவர் ஒன்றியத்தின் பெயரால் விடுக்கப்படும் குழப்பம் விளைவிக்கும் திட்டங்களுக்கு மாணவர்களாகிய நாம் எடுபட வேண்டுமா?

எமது கல்விக்கு படுகுழி தோண்டும் செயலுக்கு நாமே ஆயுதங்களாக பயன்பட வேண்டுமா? மறுபடியும் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் குழப்பங்களுக்கும் பதற்றங்களுக்கும் நாம் பலியாக வேண்டுமா?

தங்களது வன்முறை அரசியலுக்காக எங்களை ஆயுதங்களாகப் பயன்படுத்துவதை நாம் அடியோடு வெறுக்கின்றோம்.

ஏ-9 வீதியை திறக்க வேண்டுமென்பதில் தனிப்பட்ட சுயநலன்களே மேலோங்கி தெரிகின்றன. ஏ-9 வீதியில் காத்திருந்து கொழும்பில் இருந்து வரும் பொருள்களுக்கு கட்டாய வரி அறிவிட்டு வருமானம் தேடி அதில் யுத்தத்தை நடத்தி மறுபடியும் எங்கள் கல்வியைச் சீர்குலைக்கவும் இயல்பு வாழ்க்கையை சிதைக்கவும் தீட்டும் திட்டங்களே தெளிவாக தெரிகின்றன.

ஆகவே, சக மாணவ மாணவிகளே! கல்விச் சமூகத்தினரே! தனிப்பட்ட உள்நோக்கம் கொண்ட திட்டங்கள் எதுவாக இருப்பினும் அதற்கு மாணவர்களை பகடைக் காய்களாக பயன்படுத்துவதை நாம் முழுமையாக எதிர்ப்போம். பாடசாலை பகிஷ்கரிப்புகளை நிராகரித்து நாம் எமது கல்வியைத் தொடர்வோம்.

ஏ-9 வீதியைத் திறப்பதற்கன அணுகுமுறைகள் நிறையவே உண்டு. அவைகளை வேறு வழிகளில் சம்பந்தப்பட்டவர்கள் கையாளட்டும். மாணவர்களைத் தூண்டிவிட்டு பகிஷ்கரிப்பை நடத்தும் அணுகுமுறை என்பது ஏ-9 வீதியை தொடர்ந்தும் மூடிவைத்திருக்கவே வழி வகுக்கும். இயல்பு வாழ்க்கையை குலைக்கும் திட்டமிட்ட செயலே பாடசாலை பகிஷ்கரிப்பு என்பதை உரத்துச் சொல்வோம். பாடசாலை பகிஷ்கரிப்பை நிராகரித்து ஐக்கியப்பட்டு அனைவரும் எமது கல்வியை தடையின்றி தொடர்வோம்-இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருத்திவாசிக்கவும்

நேற்றய உதயனின் 6 ஆம் பக்கத்தில் பிரசுரமான சற்குணராசா ருசந்தன் என்பவரது மரண அறிவித்தலில், உயிரிழந்தவரின் சகோதரர்களான ரமேஷ்குமார்(பிரான்ஸ்), ரூபதர்சினி ஆகியோரின் பெயர்கள் அச்சுத்தவறு காரணமாக பிரசுரமாகவில்லை. அவர்களது பெயர்களையும் சேர்த்து வாசிக்கவும்.


## கணக்கீடு

B.முகுந்தன்
B.B.A. (HONS) F.M - spl

A/L 2008 வங்கி இணக்கக் கூற்று

A/L 2007 கம்பனி

சனி - ஞாயிறு

பொருளியற் கல்லூரி - யாழ்ப்பாணம்
பொருளியற் கல்லூரி - இணுவில்
BARATHY -சித்தன்கேணி

ஒரே நாளில் ஆரம்பம் - 09.09.2006 சனி

அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



### அமரர் பத்மாவதி மழவராயர்

*11.08.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (08.09.2006) வெள்ளிக்கிழமை எமது இல்லத்திலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 10.09.2006 ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும். இந் நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

புத்தூர் மேற்கு,
புத்தூர்.

மழவராயர் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஐயாமுத்து பங்கயற்செல்வம்

தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயாமுத்து பங்கயற்செல்வம், 07.09.2006. வியாழக்கிழமை பருத்தித்துறையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாமுத்துவின் மனைவியும், பாலேந்திரா, இந்திராதேவி, சீதாதேவி, திருமதி தேவி ஆகியோரின் தாயும், தவராசா, பாலேந்திரன், சந்திரா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பருத்தித்துறையில் இன்று (08.09.2006) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P. 2715550.

தகவல்:
பாலேந்திரன்

### திருமதி சண்முகசுந்தரக்குருக்கள் பிரசாதம்மா

இந்தியாவைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுண்முகசுந்தரக்குருக்கள் பிரசாதம்மா நேற்று (07.09.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகசுந்தரக்குருக்களின் அன்பு மனைவியும், சிறீஸ்கந்தறாஜாக் குருக்கள் (சிறீ ஐயா), காலஞ்சென்ற சூரியகுமார் (முன்னாள் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர்) ஆகியோரின் அன்புத் தாயும் நாகேஸ்வரியின் (கண்ணம்மா) அன்பு மாமியும் சசிகாந், பிரசாந் (கோபி) ஆகியோரின் அன்புப் பாட்டியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் (சுகாதார இலாகா) சிறியதாயும், திருமதி S.விசாலாட்சியின் அன்பு மாமியும், திருமதி நிரஞ்சனாதேவி - கிரிதரன், திருமதி பிரியதர்ஷினி - வெங்கட்றமணி, திருமதி நளாகினி சோமசுந்தரக்குருக்கள், ரவீந்திரக்குருக்கள் (றவி ஐயா) திருமதி மாலினியின் அன்புப் பாட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2006) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தாவடி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:
சிறீஸ்கந்தறாஜாக் குருக்கள்
(மகன்)

## மரண அறிவித்தல்



### S.M. மரியநாயகம்

யாழ்ப்பாணம், 12/10, மத்தியூஸ் வீதியை பிறப்பிடமாகவும், தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட S.M. மரியநாயகம் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர் - யாழ். நாவற்குழி M.V, ஓய்வுபெற்ற ஆசிரியர்- யா/ நாவாந்துறை R.C, யா/ஒஸ்மானியா கல்லூரி, யா/பளை மகாவித்தியாலயம், யா/கைதடி விக்னேஸ்வரா M.V) 05.09.2006 செவ்வாய்க்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.S.மோசேஸ், திருமதி மேரி றோசலின் நல்லம்மா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு. எலியாஸ் சிவப்பிரகாசம், திருமதி எலியாஸ் பாக்கியத்தின் மருமகனும், காலஞ்சென்ற திருமதி ஜேட்ரூட் பரிமளத்தின் அன்புக் கணவரும், வினிடா றொசிற்றா (Holland), சிராஜ் ஜீன் (Canada), யஸ்லின் றொஷான்·(Swiss), கிறெசென்சியா றோசினி (Ceylinco Insurance, Maradana), றொமியூலா ஷெறீன், கெனத் கிப்ரியன் (Gatar) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றெமிஜியஸ் (Holland), யக்குலின் யனா (Canada), வேல் நிருபராஜா (Swiss) ஆகியோரின் மாமனாரும், திரு.மோ.தார்சீசியஸ் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்), திருமதி மரியராணி மயில்வாகனம் (ஓய்வுபெற்ற ஆசிரியை யா/ சென் றோக் R.C), திரு.மோ.டயோனீசியஸ் (விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர், கண்டி) ஆகியோரின் அருமைச் சகோதரரும், திருமதி சிசிலியா தார்சீசியஸ் (பபா), திரு.G.மயில்வாகனம், திருமதி ஹேமா டயோனீசியஸ் ஆகியோரின் மைத்துனரும், றெலுக்ஷா றிஷி, பெனுக்ஷா (Holland), ஆண்ட்றிலஷானியா (Canada), ஷெறோமி, ஷெரானி (Swiss) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிஸை மஹிந்த மலர்ச்சாலையில் (MAHINDA PARLOUR) இன்று வெள்ளிக்கிழமை (08.09.2006) காலை 9 மணியிலிருந்து வைக்கப்பட்டு அடக்க ஆராதனைகள் சனிக்கிழமை (09.09.06) மாலை 3.00 மணிக்கு திருப்பலியுடன் இடம்பெற்று பின்னர் மாலை 4.30 மணிக்கு கல்கிஸை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

*கல்கிஸையில் அன்னாரின் அடக்க ஆராதனைகள் இடம்பெறும் அதேவேளையில், அன்னாரின் ஆன்மசாந்திக்காக யாழ். அருள் ஆச்சிரமத்தில் மாலை 3 மணிக்கு (09.09.2006) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்குபற்றி அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக செபிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் வேண்டப்படுகின்றார்கள்.*

62 B, 1/1, கவுடான றோட்,
தெஹிவளை.
தொ.பே: 2735915
0776405849

தகவல்:
மோ.தார்சீசியஸ்
(சகோதரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதக்குழுக்களுடன் படைகள் ஒத்துழைப்பதில்லை என்று கூறப்படுவது திருப்தி தரவில்லை என்கிறார் ஐ.நா. பிரதிநிதி

## இலங்கையின் மோசமான மனித உரிமைகள் நிலைவரத்துக்கு அரசையும் புலிகளையும் சாடுகிறார் அவர்

லண்டன், செப். 08

கருணா போன்ற குழுக்களுடன் ஒத்துழைப்பதில்லை என்ற விதியை இராணுவம் கடைப்பிடிப்பதாகக் கூறப்படுவதில் எனக்கு அவ்வளவு திருப்தி இல்லை.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் நீதிக்குப் புறம்பான கொலைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி பேராசிரியர் பிலிப் ஒல்ஸ்ரன்.

இலங்கையில் இடம்பெறும் கொலைகள், ஆள்கடத்தல்கள், ஆள்கள் காணாமற்போதல் என்பன தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிக்கை ஒன்றைத்தயாரித்திருக்கிறார் பேராசிரியர் ஒல்ஸ்ரன்.

இலங்கை நிலைவரம் தொடர்பாக பி.பி.ஸீக்கு வழங்கிய சிறப்புச் செவ்வி ஒன்றில் அவர் கூறியிருப்பதாவது:-

கருணா அல்லது ஏனைய குழுக்களின் பேரில் இங்கு நடப்பதைத் தடுப்பதில் அரசின் சக்தியைப் பற்றி நான் மிகைப்படுத்திக் கூறமுன்வரவில்லை. நான் இலங்கையில் இருந்தபோது ஒரு விடயத்தை தெளிவாக்கினேன். அதாவது கருணா குழுவை அரசு கண்டனம்செய்திருப்பது மற்றும் அதன் நடவடிக்கைகளில் இராணுவத்துக்கு எந்தத் தொடர்பும் இருக்கக்கூடாது என்று அரசாங்கம் அதிகாரபூர்வமாகக் கூறியிருப்பது. இந்த இரண்டும் யதார்த்தமான நடவடிக்கைகளின் மூலம் வெளிப்படையாகக் காண்பிக்கப்பட வேண்டும். கருணா அணியுடன் ஒத்துழைப்பதில்லை என்ற விதியை இராணுவம் கடைப்பிடிப்பதாகக் கூறப்படுவதில் எனக்கு அவ்வளவு திருப்தியில்லை.

தற்போதைய மற்றும் கடந்தகால நிலவரங்களில் மிகவும் முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன என நான் நினைக்கின்றேன்.

கடந்த காலப்பிரச்சினைகள் குறித்துக் குறிப்பிடும்போது காணாமற்போன சம்பவங்கள் குறித்த மனித உரிமை ஆணைக்குழு விசாரணை கைவிடப்பட்டமை மிகவும் கவலை அளிக்கின்றது.

அவற்றுக்கு மிகவும் நிபுணத்துவம் மிக்க விசாரணைகள் தேவைப்படுகின்றன. ஒரு நிலையில் அவை நிறுத்தப்பட்டுள்ளன என்றே தென்படுகின்றது.

தற்போதைய நிலவரத்தைப் பொறுத்தளவில் பல முக்கிய கொலைகள் குறித்த விசாரணைகளில் அரசு செயற்பாட்டுத் திறனுடன் செயற்படவில்லை என்று நான் கருதுகின்றேன். இது குறித்து வலுவான புலன் விசாரணைகளை நடத்த பொலிஸார் தவறிவிட்டனர்.

தற்போதைய நிலையில் ஒருவருக்கொருவர், பதிலுக்குப் பதில் இக்கொலைகள் தொடர்பாக குற்றச்சாட்டுக்களை நிகழ்த்துகின்றனர்.

மக்கள் காணாமற்போவது குறித்தும் படுகொலை செய்யப்படுவது குறித்தும் விசாரணை நடத்துவதில் பாதிக்கப்பட்டோர் சீரழிவு நிலை அதிகரித்து வருவதால் அது குறித்து பெரும் ஆபத்து ஏற்பட்டதாக நான் நினைக்கின்றேன். இது ஒட்டுமொத்த சமூகத்துக்குமே அச்சுறுத்தலாக உள்ளது.

இந்த விடயங்களில் செயற்றிறன் மிக்க புலன்விசாரணைகள் நடத்தப்படுவது அவசியம் என நான் நினைக்கிறேன். ஆகவே, இரு தரப்பையும் அதாவது இலங்கை அரசையும், விடுதலைப் புலிகளையும் நாங்கள் கேட்டுக்கொள்வது, இருதரப்பும் தமது பொறுப்பை மறுக்கின்றார்கள். இருதரப்புக்கும் இதுகுறித்து நன்கு தகவல்கள் தெரியும். இருதரப்புகளும் நல்ல புலனாய்வு வசதிகளைப் பெற்றுள்ளன.

இவற்றில் பல விடயங்களைக் கண்டுபிடிக்க உதவும் தகவல்களை இவர்களால் தரமுடியும். ஆனால், இவர்கள் பெரிய அளவில் அதனைச்செய்வதில்லை. அதுதான் இங்கு பிரச்சினை.

தற்போதைய மதிப்பீடுகளின்படி இந்த வருடத்தில் மாத்திரம் ஆயிரத்து இருநூறு பேர் இலங்கையில் கொல்லப்பட்டுள்ளனர்.

இவற்றில் பல கொலைகளுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று தெளிவாகத் தெரிகின்றது. குறைந்தது பதிலுக்குப் பதிலாக நிகழ்த்தப்பட்ட கொலைகள் அல்லது பழிவாங்கலாக நடத்தப்பட்ட கொலைகளுக்கு தாம் தான் காரணம் என்பதை புலிகளின் பிரதிநிதிகள் எனக்கு தெளிவுபடுத்தியுள்ளனர். ஏனைய கொலைகளுக்கான பொறுப்புகள் குறித்தும் சில பலமான சந்தர்ப்ப சான்றுகள் இருக்கின்றன.

விடுதலைப் புலிகள் விடயத்தில் நம்பகத்தன்மை குறித்த பெரும் பிரச்சினை இருப்பதாக நான் கருதுகின்றேன். கணிசமான எண்ணிக்கை தொடர்பான கோப்புகள் குறித்து அவர்கள் தமது நம்பகத்தன்மையைத் தெளிவுபடுத்தவேண்டும் என்ற கருத்துணர்வு உள்ளூரிலும், சர்வதேச மட்டத்திலும் உள்ளது. இந்தக் கருத்துணர்வு இருக்கும் வரை புலிகளைத் தடைசெய்யவிரும்புபவர்கள், ஒரு நாட்டுக்குள் சட்டபூர்வமானவர்களாகப் புலிகளைக் கருத விரும்பாதவர்கள் பலமடைவார்கள்.

ஆகவே, மனித உரிமைகளை முக்கியமானவையாகக் கருத ஆரம்பிப்பதும் தமது குறிக்கோளை அடைவதற்கு முக்கிய மற்றதுமான இக்கொலைகளை நிறுத்த முன்வருவதும் விடுதலைப் புலிகளைச் சார்ந்ததாகும். (ஐ - 12)

# மோதல் நடக்கும் பகுதிகளிலும் ஐ.சி.ஆர்.சியின் பணி தொடர்கிறது

கொழும்பு, செப். 08

இலங்கையில் பல்வேறு மனிதாபிமான சேவைகளையும், பணிகளையும் செய்து வரும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு (ஐ.சி.ஆர்.சி.) படையினருக்கும், புலிகளுக்குமிடையே கடந்த ஜூன் மாதம் மோதல் மீண்டும் மூண்டதைத் தொடர்ந்து தனது பணியை பல்வேறு இடர்களுக்கும் மத்தியில் மோதல் இடம்பெற்ற பகுதிகளில் நிலைகொண்டு செய்து வந்திருக்கிறது.

கடந்த ஜூன் மாதத்துக்குப் பின்னர் ஐ.சி.ஆர்.சி. ஆற்றிய சேவைகள், பணிகள் என்ன என்பதை ஐ.சி.ஆர்.சியின் தலைமையகம் பட்டியல் போட்டு அறிவித்திருக்கிறது.

விவரம் வருமாறு:-

13,500 குடும்பங்களைக் கொண்ட 53 ஆயிரம் பேருக்கு அதாவது, மோதல் காரணமாக பாதிக்கப்பட்டோருக்கு அத்தியாவசிய வீட்டுப்பொருள்கள், சுகாதார தளபாடங்கள், குழந்தைகளுக்குத் தேவையான பொருள்களைக் கொண்ட பொதிகள் வழங்கப்பட்டன.

இடம்பெயர்ந்த மக்களுக்கு 500 தற்காலிக குடியிருப்புகளை நிறுவிக்கொடுத்திருக்கிறோம். எண்பது ஆயிரம் தார்பொலின் படங்குகளும், 500 கூடாரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இடம்பெயர்ந்த மக்களின் பாவனைக்காக லட்சக்கணக்கான லீற்றர் குடிதண்ணீரை நீர்த்தாங்கி ட்ரக்குகள் மூலம் கொண்டுவந்து கொடுத்திருக்கிறோம். 20இற்கும் மேற்பட்ட கிணறுகளை சுத்தம் செய்து பாவனைக்கு உதவினோம். 75 மலசலகூடங்களைக் கட்டிக் கொடுத்திருக்கிறோம்.

முதல் தடவையாக தடுத்துவைக்கப்பட்டோரின் விவரங்களை - சுமார் 150இற்கு மேலானோரை பதிவுசெய்திருக்கிறோம்.

தாங்கள் பத்திரமாக இருப்பதாக தமது குடும்ப உறவினர்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு தகவல் தந்த 450 பேரின் விவரங்களைப் பதிவுசெய்திருக்கிறோம். இதில் 220 பேருடன் தொடர்புகொண்டு உரிய தகவல்களைப் பரிமாறியிருக்கிறோம்.

30,600 சுவிஸ் பிராங் பெறுமதியான மருந்துகள், வைத்திய உபகரணங்கள் மற்றும் உடுதுணிகளை வைத்தியசாலைக்குக் கொடுத்திருக்கிறோம்.

## தமிழர் புனர்வாழ்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடையிலான மோதல்கள், விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள், எறிகணை வீச்சுத் தாக்குதல்கள் போன்ற சம்பவங்களால் நாளாந்தம் மக்கள் எதிர்நோக்கி வரும் அவலங்கள் குறித்தும், இடம்பெயர்ந்து நிர்ப்பந்திக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின் மீள்வாழ்வுப் பணிகளை முன்னெடுப்பதிலுள்ள நிதி, பொருளாதாரத் தடைகள் மற்றும் ஏனைய நெருக்கடிகள் பற்றியும் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகளால் இச்சந்திப்பின் போது நோர்வேக் குழுவினருக்கு எடுத்து விளக்கப்பட்டது.

மக்களின் இந்த நெருக்கடிகள் மிகுந்த வாழ்வியல் சூழ்நிலைகளுக்கிடையே எந்தவித முன்னறிவித்தலுமின்றி அரசு மத்திய வங்கி ஊடாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக்கணக்குகளை முடக்கி வைத்துக்கொண்டு நிதி நடவடிக்கை களை இரத்துச் செய்திருப்பது தொடர்பாகவும், முடக்கப்பட்டுள்ள நிதி மூலங்களுக்கூடாக முன்னெடுக்கப்பட்டுவந்த வேலைகள் யாவும் பின்னடைந்து காணப்படுவது பற்றியும் நோர்வேக் குழுவினருக்கு விளக்கப்பட்டது. (ஐ - 12)

## ஜே.வி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

❖ வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிக்க வேண்டும்.

உட்பட நான்கு கோரிக்கைகளையே ஸ்ரீல.சு. கட்சி நிராகரித்திருந்தது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தொடர்ந்தும் அரசுடன் இணையும்படி ஜே.வி.பியிடம் வேண்டுகோள் விடுத்து வருகிறார். இணக்கம் காணப்படாத கோரிக்கைகள் குறித்து நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்கும் படியும் ஜனாதிபதி கேட்டுள்ளார். இந்த நிலையிலேயே ஸ்ரீ.ல.சு. கட்சிக்கும், ஜே.வி.பிக்குமிடையில் இன்று பேச்சுக்கள் நடைபெறவுள்ளன. (க)

## அவசரகாலச் சட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கக் கூடியதுமான பேரினவாதச் சட்டம்'' என்ற சாரப்பட இ.தொ.கா. தலைவர்கள் உட்பட தமிழர் தரப்பினர் இச்சட்டத்தை கடுமையாக விமர்சித்தும் வந்தனர்.

இந்தநிலையில் சமீபத்தில் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டு அரசுடன் இணைந்துகொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இப்போது அவசரகாலச் சட்டத்தை ஆதரித்து வாக்களிக்கத் தொடங்கியிருக்கிறது.

இதுபோலவே மற்றொரு சிறுபான்மைக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இச்சட்டத்துக்கு ஆதரவாகக் கை உயர்த்தி வருகிறது.

இவற்றோடு ஜே.வி.பி, ஐ.தே.க., ஹெல உறுமய ஆகிய கட்சிகளும் கடந்த புதனன்று நாடாளுமன்றத்தில் அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒருமாத காலம் நீடிப்பதற்கு ஆதரவளிக்க, 99 மேலதிக வாக்குகளால் அச் சட்டம் நீடிக்கப்பட்டது.

வழமைபோல ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியான தி.மகேஸ்வரன், மேலக மக்கள் முன்னணித்தலைவர் மனோகணேசன் ஆகியோரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரும் தமது பங்குக்கு அவசரகாலச் சட்டத்தை எதிர்த்துப்பார்த்தனர். எனினும், அவர்களது எதிர்ப்பு எடுபடவில்லை. அதிகப்படியான மேலதிக வாக்குகளால் சட்டம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டது.

இது ஒருபுறமிருக்க இதுவரை காலமும் சபையில் இச்சட்டத்தை எதிர்த்துவந்த மலையக மக்கள் முன்னணிக்கு இம்முறை இரண்டும் கெட்டான்நிலை ஏற்பட்டது. ம.ம.மு சமீபத்தில் அரசுடன் இணைந்து கொண்டதால் அவசர காலச்சட்டத்தை அரசுடன்இணைந்து ஆதரிப்பதா அல்லது, தமிழ் மக்களுக்கு எதிரான சட்டம் என்ற வகையில் அதனை எதிர்ப்பதா என்ற இக்கட்டு அக் கட்சிக்கு எழுந்தது.

இந்த நிலையில் இரண்டையும் தவிர்த்து - அவசரகாலச் சட்ட விவாத நாளில் நாடாளுமன்றப் பக்கமே தலை வைக்காமல் - தந்திரமாக நழுவிக்கொண்டனர் மலையக மக்கள் முன்னணியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும். (க)

## தூதர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது இந்தக் கருத்துக்கு பதிலளிக்கும் விதத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சு நேற்று புதுடில்லியில் அறிக்கை ஒன்றை விடுத்தது.

''எந்த ஒரு நாட்டினதும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவது என்பது இந்தியாவின் கொள்கையல்ல.

''இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் ஒரு மூத்த தூதுவர். அவர் உரிய நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கக் கூடியவர். இலங்கை - இந்திய இருதரப்பு உறவுகளுக்குப் பெரும் பங்காற்றியவர்'' - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ - 12)

## இலங்கை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து தாங்கள் விலகிவிட்டார்கள் எனத் திட்டவட்டமான அறிவிப்பு எதையும் புலிகள் விடுக்கவில்லையாயினும் -

''தனது ஆக்கிரமைப்பை இலங்கைப் படைகள் விரைந்து விலக்கிக்கொள்ள நடவடிக்கை எடுக்காவிடில் விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் தகுந்த பதிலடி கொடுப்பார்கள்'' - என்ற சாரப்பட தமிழ்ச்செல்வன் கூறியிருக்கின்றமை, மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய விடயங்கள் அரங்கேறப் போவதற்குக் கட்டியம் கூறும் விவகாரம் எனப் புதுடில்லி எதிர்பார்க்கின்றது என்றும் கூறுப்படுகின்றது.

வடக்கு, கிழக்குக்கு வெளியிலும் புலிகளின் பதிலடி அமையலாம் என்ற எச்சரிக்கையுடன் கூடிய எதிர்பார்ப்பும் புதுடில்லியில் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்தியாவுக்கு எதிரான உணர்வுப் போக்கு தென்னிலங்கை அரசியல் மையங்களில் மேலோங்கி வருவது குறித்தும் -

பாகிஸ்தானுடனான இராணுவ ரீதியிலான உறவுகளை கொழும்பு பலப்படுத்தி வருவது பற்றியும் புதுடில்லி அதிகம் கவனத்தில் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

நெதர்லாந்துத் தலைநகர் பிறஸல்ஸில் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமைகளின் கூட்டத்தில் இலங்கை விவகாரம் குறித்து விரிவாக ஆராயப்படவிருக்கையில் -

அந்தக் கூட்டத்தின் முடிவுகளைப் பரிசீலித்து. அடுத்த கட்ட நகர்வுகள் குறித்துத் தீர்மானிக்க இந்தியா கருதியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (உ)

## பங்களாதேஷ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த கடற் பகுதிக்கு விரைந்த கடற்படையினர் கப்பலில் இருந்த சகலரையும் பாதுகாப்பாக மீட்டனர். எனினும், பின்னர் அந்தக் கப்பல் கடலில் மூழ்கிவிட்டது. (க)

## யாழ்.திருமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யற்கல்லூரி, பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வெளிமாவட்ட மாணவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றும் வெளிநாட்டு மற்றும் தென்பகுதி ஊழியர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையிலுள்ளனர்.

இவர்களை கொழும்புக்கு அழைத்துவர பயணிகள் கப்பல் சேவையொன்றை நடத்த அரசு ஏற்பாடுகளை மேற்கொண்டது. இதற்கான கப்பல் கடந்த பத்து நாட்களாக கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கின்றது. பயணிகள் கப்பலுக்கு வழித்துணை வழங்கும்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கப்பல் அடுத்த வாரம் பயணிகளை ஏற்றி வருவதற்கு யாழ்ப்பாணத்திற்குப் புறப்படுமென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திவாரட்ன தெரிவித்தார்.

இதேவேளை - இந்தக் கப்பல் சேவையை நடத்துவதற்கு விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து இதுவரை எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை இருதரப்பினரும் இணக்கம் தெரிவித்தால் மாத்திரமே பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்று செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினர் தெரிவித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க)

BEACON - யாழ். நகர்
A/L 2007, 2008
கலை, வர்த்தக வகுப்புகள் நடைபெறுகின்றன.
நிர்வாகி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org